# சந்திர தீபம்

**தவத்தைப் பெருக்கவும், தர்மத்தைக் காக்கவும், சிவத்தைப் பேணவும், திருவருள் பூண்டது.**

இதழ் 2 காலயுத்திவருஷம் மார்கழி மாதம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை [12-1-1979] சுடர்

## சிவனே மூன்று காலமும் தோன்ற நின்றனே. நின் தூய நெறிநின்றார் வழிவந்த என்றால் உணரப்படும் நின்னை நினையவல்லவர் இல்லை.

இவ்வாறு எம்பிரான் திருஞான சம்பந்தர் சொல்கின்றார். இன்னமும் வலிஉறுத்தி அறிவில் அன்பும் அன்பில் அறிவுமாக இருமையின் ஒருமையுடைய மறுவிலாத தூய நெறி நின்ற அந்தணர் குலத்து அவதரித்த என்றால் வணங்கப்படும் நின்னை நினைய வல்லவர் இவ்வுலகில் இல்லை என்கின்றார். இதனாலே உலகில் நெறிதான் அந்தணர்க்கு உயிரிலும் மேம்பட்டது. இதனை இன்று அந்த அந்தண குலத்தவர் உணரத் தவறி உள்ளனர்.

ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம் என்று ஔவையும் கூறினாள். அந்தணர்கள் தம் தகுதியையும் பெருமையையும் உணரத் தவறி விட்டனர். ஏனைய உலகத்தவர் போலாகி விட்டனர். ஒரு அந்தணர் தம் தகுதியை நெறியை உணரத் தலைப்பட்டால் அது அவர்க்கு மிக நன்று. தன் சுவை தனக்கு தெரியாது பிறர்க்குக் காட்டி என்ன பிரயோசனம்?

சிவநெறியின் பெருமை உணர்ந்த அந்தணப் பெரியோரே! கல்விமான்களே தமிழ் சமுதாயமே தயவு செய்து நாம் சொல்வதையும் சிந்தியுங்கள்,

நாம் தமிழர் அதிலும் உலகில் தெய்வ சீலத்தை உணர்ந்து தெளிந்து தெய்வத்தின அருளால் உலகில் தீங்கின்றி வாழ்ந்த ஓர் மரபில் தோன்றியவர்.

அந்த மரபு சிவனடியார்கள் சிரமேற் கொள்ளும் திருஞானசம்பந்தர் முதல் சிவனடியார் வழியாக உள்ளது. இந்த நன்மரபு வாழை அடி வாழையாக நீளப் பரந்து வந்தது.

சமீபகாலத்தில் இந்த மரபில் [illegible] மடாதிபதிகள் தம்மைச் சாமிகள் என வெளியில் காணபித்து பட்டம் கொடுத்து பதக்கம் கொடுத்து சைவம வளர்க்கிறோம் என்ற போர்வையில் தாம் செய்யும் செயலால் நாட்டில எனன தீங்கு வருகின்றது வந்து கொண்டிருக்கின்றது என்பதை நேரில் உணர்ந்தாலும் தீவகுப் பெருக்கத்தை மறைத்து தமது மகாநாடுகள் சொற்பொழிவுகள் பாராட்டுக்கள் இவற்றால் தாம் தொண்டு செயகிறோம் எனக்காட்டி உலகை மயங்க வைத்தனர்.

இந்த மகாநாடு கௌரவித்தல் பட்டம் கொடுததலால் தீய நடத்தை உடையவரும் இனியதாகப் பேசும் நிலையும சபையோரைக் கவரப் பேசக் கூடியவராக இருப்பின் அவரை சுவாமி எனவும் செல்வி எனவும் கௌரவித்தும் நெறியிலாத வகை வெளிப்பாசாங்கில் சமயம் வளர்த்துள்ளனர். இதனாலே சமயரீதியில் நாட்டில் பெரும் போலித்தனம் பெருகி உள்ளது.

இந்த ஒரு அநியாயச் செயலை நீளப் பரவ விடுத்தல் வருங்கால சந்ததியின் குழந்தைகட்கு உண்மை உணர வாய்ப்பு இராதே என்றதால் வேத நெறி வளர்க்கும் முருகப் பெருமான் திருவருளால் அவதரித்து சைவநெறி இன்றுபோல் முன்னர் குன்றி இருந்த காலத்து அதனை மீண்டும் நன்நெறிப்பட ஆக்கிய எம்பெருமான் திருஞானசம்பந்தர் தம்காலத்து பின்னருள்ள மக்களும் உணர்ந்துய்ய பலபாடல் மொழிந்தார். அப்பாடல் நம்மவருக்கு ஓர் வரப்பிரசாதமுடைய உபதேசமாவன. அதுவும் அன்றி சைவ நெறியின் நல் விளக்கமுமாவன. இவர் பாடலை விளங்கினார் சைவ நெறியின் சீலமும் உயர்வும் தெளிவுறுவார்.

கடவுளின் இயல்பும் அந்தணர்சிறப்பையும் அடியார் பெருமையும் விளங்க திருஞானசம்பந்தர் பதிகத்தில் திரு எழுக்கூற்றிருக்கை என்னும் பதிகத்தைக் கீழே தருகின்றேன். ஓதி உணர்ந்து நல் நிலை அடையுங்கள்.

அவருடைய இப்பதிகத்தை நன்கு நீங்கள் விளங்கினால் எம் சைவம் என்றால் மேடைப் பேச்சு மட்டுமோ? அதை விடுத்து நெறிப்பட வாழ்தலோ பெரிது என்பதைத் தெளியலாம். இன்று சைவநெறியில் நான் தவறு காண்பிப்பது பொய்யோ அல்லது பொறுமையோ அல்லது சிலர் மேல் என் தனிப்பட்ட கோபமோ எது என்பதை உணருங்கள். வீணான பழியை என் மீது சுமத்தி என் புனிதமான பணியை மாசுபடுத்தி நீண்ட நரகக் குழிக்கு ஆளாகாமல் என் பணி சரியோ? உண்மையோ? அல்லது நீங்கள் கௌரவிக்கும் சுவாமிகள் செல்விகளின் போக்கு உண்மையோ? அது உங்கட்கு நன்மை பயக்குமோ? இவர் இன்று என் செய்கிறார்? ஞானசம்பந்தர் என சொல்கிறார்? எது சரி என்பதை உணருங்கள்.

இன்று இலங்கை இந்தியாவில் உள்ள மடாதிபதிகள் எப்படியானவர்? இவர்கள் கௌரவத்திற்குரியவரோ! இவரால் கௌரவிக்கப்படும மக்கள் எப்படியானவர். இவர்கள் சிவசம்பந்தமுடைய சைவ நெறியில் பட்டம் கொடுக்க ஏற்க எத்தகுதி உண்டு? மடாதிபதிகளும் சிவனடியாரோ அப்படியாயின் சிவனடியார் எப்படியானவர் என்பதை எம் மக்கள் உணரவேண்டும்? நாம் யாரிலும் குறை காண வரவில்லை. எனது பணி உண்மையை விளங்க வைத்தல். அடுத்து தொண்டினைப் போற்றுதல். இந்த வகையில் மடாதிபதிகள் என் செய்கின்றார்? அவரால் என்ன ஆகின்றது. மடாதிபதிகளின் சமஸ்தான வித்துவான் பேராசிரியர் இவர்கள் யார், அவரும் சீலமுடைய சிவனடியவரோ? என்பதை நீங்கள் உணரவேண்டும். பேச்சின் இனிமை நயம் இவை பற்றி நாம் குறிப்பிடவில்லை. நெறியைப் பற்றியே குறிப்பிடுகின்றோம்.

ஒருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திகளாயினை
இருவரோ டொருவ னாகி நின்றனை.
ஓரால் நீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்ட மூன்றுகக் கோட்டினை
இருநதி அரவமோ டொருமதி சூடினை
ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்.
நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானிலம் அஞ்சக்
கொன்று தலத்துற அவுணரை அறுத்தனை
ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
முக்குணம் இருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை ஒருங்கிய மனத்தோடு
இருபிறப் போர்ந்து முப்பொழுதுகுறைமுடித்து
நான்மறை யோதி ஐவகை வேள்வி
அமைத்து ஆறங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை
இகலிய மைந்துணர் புகலி அமர்ந்தனை
பொங்குநாற் கடல்சூழ்வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேல் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை.
பரபுரம் என்றுணர் சிரபுரத்து உறைந்தனை
ஒருமலை யெடுத்த இருதிறல் அரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை அமர்ந்தனை
ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை
எச்சனே மிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறு பதமும் ஐந்தமர் கல்வியும்
மறைமுதல் நான்கும்
மூன்று காலமுந் தோன்ற நின்றனை
இருமையின்ஒருமையும் ஒருமையின்பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்**
**அனைய தன்மையை ஆதலின் நின்னை**
**நினைய வல்லவர் இல்லை நீள்நிலத்தே.**

இப்பதிகத்தின் கருத்து இதுவாகும்

எல்லாம் உணரமுன்பு ஒன்ருய் ஓர் உருவமாயினை; எவரது உணர்விற்கும் எட்டாத அவ்வுருவாகி அதனின்று பெண் உருவாகிய நிலையிலும் ஈருருவமாகி அப்பாலும் விரிந்து வானம் காற்று நெருப்பு நீர் நிலம் முதல் பூவுலகம் அவற்றுடன் இணைந்த இரு சுடராகும் சூரிய சந்திரர் தேவர்கள் பிற உயிர்கள் யாவும் படைத்துக் காத்து அழித்திட பிரம்மா விஷ்ணு உருத்திரன் என்னும் மூன்று கடவுளாயினை. அழித்தற்குரிய செயலாகும் அச்செயல் உனதானதின் பிரமா விஷ்ணு என்னும் இருவருடன் ஒருவனுகி நின்றனை.

ஓர் ஆலமரத்தின் நீழல் அமர்ந்து நினது திவ்விய திருவடிகள் இரண்டும் காலை உச்சிப் பொழுது மாலை என்னும் மூன்று காலத்தும் வழிபட்ட சனகர் சனக்குமாரர் சனுதனர் சதானந்தர் என்னும் நால்வர்க்கும் ஒளி நெறியைக் காட்டினுய். முன்பு ஒரு கால் உன் இரு கண்கள் அம்பாள் திருக்கரத்தா மூடப் பெறலால் அது மறைய ஒளி மறைய அதற்காக என்றும் மறைபடா வகை ஒளி பிரகாசித்திட மூன்று கண்ணுக நெற்றியில் ஒன்றும் கொண்டருளினுய். உலகம் அழிவுறப்பரந்த பெரிய ஆறு; நாகம் இவற்றுடன் ஓர் இளம்பிறை சூடினை.

ஒரு தாளும் எவற்றையும் அறுத்திடும் கூரிய வேல் போலும் மூன்று இலை வடிவான கூர்மை நுனி உடைய சூலம் நான்கு கால் உடைய பெண்மான் ஐந்து தலை உடைய நாகம் இவை திருக்கரத்து ஏந்தினை; எவற்றையும் கொல்லும் அகன்ற வாயுடையதும் மூன்று மதம்பொழிவதும் இரண்டு பெரிய கொம்புடையதுமாகி அடங்கிடாதவலி உடைய ஒரு பெரும் யானை தன் நிலை கெட்டழிந்திட அதன் தோலை உரித்தனை. ஒரு வில் (மேருமலை) எடுத்து இரு புறமும் வளையாததை வளையும் படி திருப்பாதம் ஊன்றி வளைத்து அதனினல் முப்புரங்களுடன் இப்பெரிய உலகம் அஞ்சிட அப்புரங்களைக் கொன்று அவ்வசுரர் பூமியில் தம் கொடுமை கெட்டு விழுமாறு அறுத்தனை.

ஐந்து புலன்களாகும் கண்ணிற்கு இனிய காட்சி காதுக்கு இனிய ஓசை நாவிற்கு இனிய சுவை மூக்கிற்கு இணிய மணம் உடம்பிற்கு இனிய அணைவு இத்தனையையும் விரும்பாது இவற்ருல் வரும் இன்பங்களை ஒடுக்கியும் நாலு கரணங்களாய மனத்தில் தோன்றும் எழிச்சியின் மலர்ச்சி இன்னவகையில் இப்படி என்ற புத்தித் திறனின் சாதுரியம் சித்தத்து இன்ப நிலை நான் என்ற வகை மானத்தில் அழுந்தல் எனும் நான்கையும் அமைதியில் ஒடுக்கி பரிமளிப்பு குதூகலம் வள்ளற்றன்மை மேம்பாடு இவை தரும் ராசதகுணம் கொலை வஞ்சனை காம உணர்வு கோபம் இவை தரும் தாமத குணமும் இவையன்றி தெய்வ உணர்ச்சியுடைய சாந்த நிலை வருவிக்கும சாத்வீக குணம் இவையாவும் ஒருங்கிய மனத்துடன நிற்கும் தேவர்கள் போற்றும் படி நின்ருய்.

உலக பந்தங்களில் நின்றும் விடுபட்டு அன்புடன் அறிவு அறிவுடன் அன்பும் கலந்து ஒருமைப்பட்ட மனத்தினுடன் தான் இவ்வுலகில் பிறக்கும் போது எல்லார் போலவும் இருந்தாலும் அறிவு கூடும் நிலையும் கிரியைகளின் மகிமையும் உரிமையும் எய்தப் பெறலால் இருபிறப்பாளனுனேன் என்ற இருபிறப்பின் பெருமையை உணர்ந்து கலை மத்தியானம் மாலை என்னும் மூன்று காலத்தும் எழும் குறைகளை நிவர்த்திக்க செய்திடும் கிரியைகளை முடித்து நான்கு வேதங்களை முறைப்படி ஓதி பூதயாகம் பிதிர் யாகம் முதல் ஐந்து வகையாகங்களை அமைத்து வேதத்தின் அங்கமாகும் ஆறினையும் உணர்ந்து நித்தலும் வேத முதல் எழுத்து ஓதி தம் வாழ்வை வேதம் விதித்த வரன் முறையாக வாழ்ந்து இந்த மேல் எழுஉலகங்களில் நீங்குருவகை வளர்த்து நிற்கும் அந்தணர் இருக்கும் பிரமபுரத்து நீயும் ஒருவனுகி அவருடன் இணைந்து அவர் செயல் பேணி நின்ருய். பிரமபுரம் என்பதின் விளக்கம் அந்தணர் பெருமையால் வந்தது என்பது குறிப்பு. ஆறுகால் உடைய வண்டுகள் பாடும் முங்கில் அடியில் சிவன் தோன்றிய வரலாற்ருல் வேணுபுரம் எனும் அத்தலத்தை விரும்பினுய்.

எல்லாவித கொடும் தன்மையும் நீங்கி உள்ளம் நன்நெறியில் அமைய விளங்கும் பெரியோர் புகலிடமாகும் புகலி எனப்படும் இத்தலத்து விரும்பினுய். பொங்கும் நான்குதிசைப் பெருங்கடல் சூழ்ந்திட பூசிக்கும் அடியபர் பழிநீக்கும் வெங்குரு என்னும் த்தலத்தை விரும்பிக் கொண்டாய்.

உலகம் அழிவுறும் காலத்தும் அழிவுருத அருள் தன்மை பூண்டு; அதனுலே பிரளய வெள்ளம் வந்திட அந்த வெளத்து மூன்று உலகமும் புதைய ஆழ்ந்து நிற்பவும் அதில் பெரும் ஆற்றல் படைத்து அழிவில் ஆழாதவகை நிற்குள் தோணி போன்ற இயல்புடையதாய் தோணிபுரம் என்னும் நாமத்தின் சிறப்புடைய இத்தலத்து அமர்ந்தனை. தொலைவிலாத சங்க நிதி பதும நிதி எனும் என்றும் எடுக்க எடுக்க குறையாத செல்வம் வாய்ந்த பூந்தாராய் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற அத்தலத்து ஏற்புடைய ஓர் செல்வத்துச் செல்வனுகி நின்றனை.

எல்லாவற்றிற்கும் மேலான இடம்; அது தான் காமம் வெகுளி மயக்கம் இக்குறை கடந்து ஞானிகள் தம் உள்ளத்தைப் பார்த்திடும் பொழுது அங்குள்ள நிலை இங்குள்ளதாக இருத்தலில் பரபுரம் என்ற ஞானவான்கள் சிரமேற் கொண்டதனுல் சிரபுரம் என்னும் அத்தலத்து அமர்ந்தனை.

ஒரு பெரும் கைலை மலையை எடுத்த இராவணனது பெரும் வலிமையைக் கெடுத்தருளினுய். புறவம் என்னும் இன்னுமொரு சிறப்புப் பெயருடைய இத்தலத்து அமர்ந்தனை.

மழை நீர் ஊற்று நீர் ஆற்று நீர் எனும் மூன்று நீரினுல் விளங்கும் கடலில் பள்ளி கொண்ட பரந்தாமனும் நான்முகனுன பிரமனும் என்றும் அறிய முடியாத பண்புடன் நின்ருய் சண்பை நகர் என்னும் சிறப்புடைய இத்தலத்து அமர்ந்தாய்.

சந்தேகமுறும் சமணரும் ஆறு வகையான புத்தரும் ஊழிக்காலம் போனுலும் உணரமுடியாத அருள் சிறப்புடைய சீகாழி என்னும் இத்தலத்து இருந்தனை.

யாதாதி கருமங்களில் வல்லவரும் ஏழிசையின் வல்லமையும் கொண்ட பராசர முனிவனுககு உற்ற பழி தீர்த்த சிறப்பால் கொச்சை என நாமம் பெற்ற இத் தலத்தை மகிழ்ந்து இருந்தீர்.

ஆறு பதங்களும் ஐந்தான வகைக்கல்வியும் எவற்றிகரும் முதல் நூலாக எழுந்த வேதம் முதல் நானகும் நடந்த நடக்கின்ற நடப்பன ஆகிய மூன்று காலமும் உன்னிடத்து தோன்ற நின்ருய்.

சத்தி சிவம் என்னும் இரண்டும் ஒன்ருகிய ஒருமைப்பாடும் (தாம் அது என்ற இருமையின் பிரிவு இன்றி தானே தான் என்ற இருமையின் ஒருமை) அவ்வாறு சத்தி சிவம் ஒன்ருய தன்மையில் விளையும் ஒருமையின் பெருமையும் விளங்கிட; எக்காலமும் ஏதும் ஒரு மறுதோன்றல் இல்லாத அந்தணர் பயின்ற கழுமலம் என்னும் சிறப்புப் பெயர் பூண்ட முதிய இத்தலத்து கவுணிய கோத்திரத்து அவதரித்த திருஞான சம்பந்தன் மொழிந்த இப்பாடல் கழுமலம் என்னும் இம் முதிய தலத்து என்னுல் உணர்ந்து அறியும் அத்தன்மையை நீயே ஆதலின் உன்னை நினைய வல்லவர் இல்லை அகன்ற இப் பூமியிடத்து என்றவாறு.

குறிப்பு— இப்பதிகத்து சீகாழி என்னும் அத்தலத்தின் பன்னிரண்டு பெயரும் வருகின்றன; இத்தலத்திற்கு பன்னிரண்டு பெயர் வந்ததற்கு பன்னிரண்டு வெவ்வேறு அருளுடைய சரித்திரம் உள்ளது. இப்பதிகம் திரு எழு கூற்றிருக்கை என்ற வகைக் கவி நயத்துடன் திருஞான சம்பந்தரால் பாடப் பெற்றது; பல மூல இலக்கியங்களுக்கு அமைய பல வித வெவ்வேறு பாடல்களை சீகாழித் தெய்வம் மேல் பாடி உள்ளார் திருஞான சம்பந்தர். இந்த சீகாழி தோணிபுரம் பிரமபுரம் வேணுபுரம் கொச்சைவயம் புறவம் வெங்குரு பூந்தாராய் கழுமலம் சிரபுரம் புகலி என்னும் பன்னிருபெயரின் வரலாற்றை எமது பெரிய புராணம் 4ம் பகுதி பக்கம் 1283 ல் காண்க.

## மடாதிபதிகள் ஞானிகளா? அடியார்களா? அன்றி அறங்காவலரா?. அவா நெறி ஞான ஆசாரத்தில் அழுக்கடையாமையைக் காண்பிப்பதா?

யோக சுவாமிகள் முற்பிறவி தோறும் செய்த புண்ணிய வசத்தால் தூய சிந்தை பெறும் ஓர் பிறவி பெற்ருர். இப் பிறவியில் சிவன் அருள் பெறும் தாகம் கொண்ட நல் இசைவுடைய சிந்தை வாய்க்கப் பெற்றது. அந்த நன்னர் நெஞ்சத்து இசைவால் சிவத்தியானம் செய்ய வாய்ப்பு கூடியது. அதனுல் உறுதியான சிவத்தியான நிலையால் ஞான ஆசாரமுணர்ந்து அதன் சிரத்தையால் திருவருள் பேற்றை இறைவனை இந்த உடம்புடன் காணும் பேற்றை எய்தினுர்.

தாம் பெற்ற இன்பம் இவ்வுலகத்து மற்றையோரும் பெறலாம் என்ற வகையில் சிவத்தியானம் செய்திட ஏதும் பிற செயலின் இடைஞ்சல் இருக்காத வகை சிவதொண்டன் தியான மண்டபம் ஒன்று ஆக்கிவைத்தார். அதன் முழு நோக்கமும் இறைவன் கருணையைப் பெற தரிசனத்தைப் பெற வாய்ப்புடைய ஓர் தியான நிலையமாக அமைத்து வைத்தார். ஏன் அவ்வணம் என்ருல் தான் எவ்வாறு தியான மூலம் சிவன் அருள் எய்தினரோ அந்த வகையாக இவ்வுலகில் திருவருள் பேற்றினதாக; முடையார் சென்று தியானம் செய்து நற்பேறுடைய ஓர் வாய்ப்புச் செய்த கருணையின் செயலாகும்.

அந்த நிலயத்தை நாம் ஓர் அறங்காவல் நிலயம் அல்லது சமயப் பிரசார நிலயம் என்றும் சொல்ல முடியாது. அது ஞான ஆசாரத்தின் சொல்லிறந்த மோனத்தைப் பயில நின்ற இடமே யாகும்.

அத்தகைய இடத்தை ஆரம்பித்து அங்கு புராணபடனம் நடக்கும் போது புராணத்திற்கு பயன் சொல்ல என்னை சுவாமி அனுமதித்தது. அவர் கட்டளைப்படி ஐந்து ஆண்டுகள் வரை அவ்விடத்து சென்று புராணத்திற்கு பயன் சொல்லி வருவேன் அப்போது சுவாமி அடிக்கடி அந்நிலய வெளிவாய்தலில் நின்று அந்நிலயத்து பொறுப்பதிகாரிகட்கு நல் உபதேசம் செய்வார். அந்த நல் உபதேசங்களில் ஒன்று தம்பிரானுக நினையாதே சாமி வேடம் போடாதே ஆட்சி புரியப்பாராதே! மடாதிபதியாகாதே என்று அடிக்கடி சொல்வதுண்டு.

இந்தவார்த்தையை எனக்கும் சொல்வார். நீ அங்கே ஆட்சி புரியப்பாராதே? அப்படியாயின் அடிச்சுக்கலைப்பன். கனக்கக்கதையதே! கோழி அறுத்த பாதிரிமாதிரி; பயன் சொல்லும் போது என்னவொசொல்லிவிட்டு நீ பிழையாய் நடவாதே! உன்னில் சிலத்தைவளர்! இப்படி பல உபதேசம் செய்வார். அப்ப

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

னே சிலவேளைகளில் நாம் வாங்கிக்கட்டும ஏச்சிற்கு அளவில்லை. இப்படி ஏசும் போது எனக்கேன் இந்த வேலை விட்டட்டு டோ என்று தான் இருக்கும் அந்தஏச்சுக்கள் ஒன்று என்னை நல்நிலையை உணர என்னையும் மறந்து சிவனை உணர ஓர் தொண்டை ஆக்கித் தந்துள்ளது.

இன்னமும் சொல்வார் எல்லை வரம்பை மீறுதே. தொண்டு எதற்கு கடவுளை அடைய அல்லவோ? நீ தொண்டு மூலம் என்னத்தைப் பெற்று என்னத்தைக் கண்டு மலரப்பார்க்கிறாய் என்று சுவாமி ஞான ஆசாரத்தின் சீலத்தை வலி உறுத்தினார்.

அன்று சுவாமி ஏன் அப்படி என்னை ஏசினார் என்ன எண்ணி வருந்திய யான் பெரிய புராணத்திற்கு பயன் சொல்பவகை இருந்தும் சிவனடியார் சீலத்தை தெளிய முடியாது இருந்தேன். ஆனால் பெரிய புராணத்திற்கு நான் ஓர் உரை எழுதி பதிப்பித்ததின் பின் தான் பெரிய புராணத்து அடியார் சீலமும் கந்த புராணத்து திருவருளின் சீலமும் நன்கு தெளிவுறவந்தது.

நாம் செய்தது உண்மையில் ஒரு தொண்டு. அத்தொண்டால் நான் பெற்றது சீலத்தின் உண்மை விளக்கம். அப்போது உண்மை அடியவர் யார்? ஞானம் என்றால் எப்படி? ஞான நிலையில் ஆட்சி புரிதல் அகங்கரித்தல் சாமிபண்ணல் எக்கதியை வருவிக்கும்? சிந்தையை உள்ளத்தைத் தூய்மை படுத்த இவை உதவுகின்றதா? என்றெல்லாம் தெளிவுற வந்தது.

அடிக்கடி யோக சுவாமி சொல்வது காசாசை தூக்கு மேடை என்பது. காசு உண்மை ஞானிக்கு ஓர் இடைஞ்சல் எந்த ஞானியையும் காசு கீழே தள்ளிவிடும். அதனின்றும் விடுபடுதல் தான் உயர்ந்த ஞானம். உண்மை ஞானிகள் அதற்காகவே பிச்சையை இச்சித்தனர் அந்தப் பிச்சையும் பசித்த போது ஒரு உணவு பிசசை என்பது பொருள் சம்பாதித்தற்கன்று. ஒருக்காலும் இன்று நாளை உயர்வு தாழ்வு இவையாவும் உண்மை ஞானிகட்கு இல்லை. அப்படி எல்லாம் இருப்ப இந்த ஞானத்துறையில் தம்மை ஞானிகள் சுவாமிகள் என்று சொல்லும் மடாதிபதிகள் என்னுகின்றார் எனபதைக் காட்ட வேண்டி வருகின்றது,

சிவனடியார் என்றால் யார்? எப்படி இருப்பர்? பல புரானம் இருந்தாலும் திருமுறையில் சேர்க்கப்பட்ட ஒரு பேறு பெரிய புராணத்திற்கு உண்டு. திருமுறை வகுப்பான பெரியபுராணம் சிவனடியாரைப் பற்றி என் சொன்னது? அதை நீங்கள் யாவரும் அறிய வேண்டும். அதிலே சொல்லப் பட்ட சிவனடியாரின் சிறப்பு அதுவாயின் இன்று மடாதிபதிகள் என்னுயினார் அவரும் அடியவரோ? அதை நீங்கள் உணரவேண்டும். திரு நீறு பூசினார் யாவரும் அடியராகக் கொண்டால் போற்றக்கு எல்லாருமே உரியர், அதில் ஏற்றத் தாழ்வு வேண்டியதில்லை. அப்போது போற்றல் எதற்கு? வெளியில் காட்டும் வேடத்தற்கோ? உள்ளச் செயலின் விளைவிற்கா? உள்ளத்தில் உண்மையிலார் வெளியில் வேடங் காட்டல் மெய்யாகுமா?

ஆதலின் இவையாவும் நீங்கள் உணரும் வகை பெரிய புராணம் சிவனடியார் பெருமை பற்றி தனியான சிறப்பி.. எடுத்துக் காட்டுகின்றது. அங்கு குறிப்பிடப்பட்ட உண்மை அடியார்களின் சிறப்புகள் பற்றி கீழ தரப்படும பெரியபுராண செய்யுட்கள் மூலம் உணர்ந்து கொள்க. செய்யுட்களின் கீழ் உரையும் தரப்பட்டுள்ளது.

**அத்தர் வேண்டிமுன் ஆண்டவர் அன்பினுல்**
**மெய்த் தழைந்து விதிர்ப்புறு சிந்தையார்**
**கைத்தி ருத்தொண்டு செய்கடப் பாட்டினர்**
**இத்திறத்தவர் அன்றியும் எண்ணிலார்.**

இவ்வண்ணம் தேவாசிரிய மண்டபத்து உறைந்திடும் அடியார்கள்; எம்பெருமான் முன்னர் தாம் விரும்பி ஆண்டுகொள்ளப் பெற்றவர்களும்; அன்பினால் உடலம் பூரித்தலால் இயல்பாகத் தோன்றும் நடுக்கமுடன் பரவசமாகும் சிந்தையுடையார்களும; தமது திருக்கைகளால் எம்பெருமானுக்கு திருத்தொண்டு செய்யும் கடப்பாடு உடையவர்களுமாய இத்திறத்தவராயவர்கள் அல்லாமலும் இன்னமும் எண்ணில்லாதவர்கள். அத்தர் முன் வேண்டி யாண்டவர் என்பதை —எனையாண்டு கொண்டு இரங்கி ஏன்று கொண்டாய் எனவரும திருநாவுக்கரசர் வாக்கும்: அன்பினால் மெய்தழைந்து விதிர்ப்புறு சிந்தையர் என்பதை— மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரையார் கழற்கீழ் கைதான் தொழுது என வரும் மாணிக்கவாசகர் வாக்கும்; கைத்திருத்தொண்டுசெய் கடப்பாட்டினர் என்பதற்கு; தன் ஈரடிக்கு என்னிரண்டு கரங்கள் தந்தான் எனவரும் மாணிக்கவாசக சுவாமிகள் வாக்கும சான்றுதல் காண்க.

**மாசி லாத மணிதிகழ் மேனிமேல்**
**பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்**
**தேசி னுல்எத் திசையும் விளக்கினர்**
**பேச ஒண்ணுப் பெருமை பிறங்கினர்.**

இந்த திருக்கூட்டத்து அடியார்கள் மாசு இலாத அழகிய திருமேனியின் புறத்தே பூசுகின்ற வெண்ணீறு போன்று உள்ளமும் கபடம் முதலிய அழுக்கின்றி வெண்மையான தூய்மை உடையவர்கள் தங்களது தேசினால் எல்லாத் திக்கையும் உண்மை ஒளி பிரகாசிக்கும்படி விளக்கினார்கள். இவர்கள் எம்மால் பேச முடியாத பெருமை விளங்கப் பெற்றார்கள்.

அடியார்கள் உளளததூய்மையால் புறத்துப் பூசிய நீற்றின் ஒளிக்கு ஒப்பாயவா. உள்ளம் அழகுடையவா எனபதை சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை—எனவரும் மாணிககவாசகசுவாமிகள் வாககும,கள்ளம் ஒழிந்து வெய்ய சொல்லை யாறி தூய்மை செய்து காமவினை அகற்றி நல்லவாறே உன்றன் நாமம் நாவின் நவின்றேத்த வல்லவாறே வந்து நல்காய்—எனவரும் சம்பந்தசுவாமிகள் வாக்கும்; பாலும் பழமும் உண்டு பகலில் நித்திரையைத் தள்ளு பாங்கான தேசுவரும்—என்ற யோகசுவாமிகள் திருவாக்கும் இப்பாடல்களில் சொல்லிய அடியார்களின் உள்ளப் பெருமை தேசு இவற்றிக்கு உதாரணமாதல் காண்க.

**பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்**
**மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்**
**ஓது காதல் உறைப்பின் நெறிநின்றார்**
**கோதி லாத குணப்பெருங் குன்றனார்.**

இவர்கள் உலகினைத் தாங்கிடும் மண், நெருப்பு, காற்று, நீர் வானம் எனும் ஐந்தும் தமது முன்னைய நிலை கெட்டுக் கலங்கினாலும் தாம் பெண் ஒரு பாகராய பெருமானின் மலர்போலும் திருவடிகள் மறவார்கள். எம்பெருமானை ஓதுகின்ற காதலாய உறுதித் திண்மையின் நல்நெறி நின்றவர். எத்தன்மையான குறைபாடுமிலாத நற்குணத்தின் பெருமலையை ஒத்தவர்கள்: எவரும் ஆராயமுடியாதபடி மேலாய நற்குணமுடையார்கள்;

**கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்**
**ஓடும் செம்பொனும் ஒக்கவேநோக்குவார்**
**கூடும் அன்பினில் கும்பிட லேஅன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினர்.**

திருக்கூட்டத்து அடியார்கள் கேடாய வறுமையும் செல்வமும் இரண்டும் நீங்கிய அருளாய செல்வமுடையவர். உடைந்த மட்பானையின் ஓட்டையும் பொன்னையும் ஒன்றாகத் தமக்கு பற்றுக்கோடு இலாத பொருளாகப் பார்த்துக் கொள்வார்கள். இறைவனைத் தமது மனத்துள் வைத்து அவருடன் அன்பினால் அணைந்து கும்பிடுதலேயன்றி தமக்கு நித்தியமாய முத்தியின்ப வீட்டினையும் வேண்டாமென்று நீக்கிடும் வீரம் உடையவர்கள்.

**ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே**
**பாரம் ஈசன் பணியல தொன்றிலார்**
**ஈர அன்பினர் யாதும் குறைவிலார்**
**வீரம் என்னுல் விளம்பும் தகையதோ?**

இந்தத் திருக்கூட்ட அடியார்கள் மாலையாக அணிவது உருத்திராக்கம். உடுக்கும் ஆடையும் கந்தையே. தமது பொறுப்பாய கடமை ஈசன் பணியன்றி வேறொன்றில்லார் எக்காலமும் தருமவழி பிசகாத கசிந்த அன்புடையர். ஏதுமொருகுறைவிலாதவர். அப்படியாய அவர்களின் வீரத்தை என்னால்எடுத்துச்சொல்லும் தகைமை உடையதோ?

இப்பெரியபுராண பாடல் அன்றி கந்தபுராணத்லுதிம் அடியார் பெருமை சிறப்புடன் பேசப்படுகிறது. அதில் இருந்து சில பாடல்களைக் கீழே தருகின்றோம். சிவனடியார் தகமை எப்படி இருக்கும் என்பதை இவை மூலம் உணருக.

**அனையர் தன்மை அறைகுவன் ஆங்கவர்**
**புனித மாதவ ராயினும் பொற்புடை**
**மனையின் வாழ்க்கையின் மல்கின ராயினும்**
**வினையின் நீங்கிய வீட்டின்பம் எய்துவார்.**

அவ்வாறான சிவனடியார் தன்மையை யான் எடுத்துச் சொல்வேன், சிவனடியார்கள் மிகத்தூய துறவி வாழ்க்கை உடையவ ராயினும் அல்லாமல் பொற்பு மிகுந்த மனைவியுடன் கூடி இல்லற தருமத்வைப் பேணி வருவோராக இருப்பினும், அவர்கள் சிவபிரானைப் பேணிவரும் திருஅருட்பேற்றால் வினைத்தொடர்பில் நின்றும் நீங்கப்பெறும் முத்தி இன்பத்தை அடைவார்கள்;

**ஏதந் தீர்சுடர் தன்னையும் எண்ணும்ஐம்**
**பூதந் தன்னையும் போதிகன் தன்னையும்**
**பேதஞ் ,செய்வர் பிறப்பொழித் தோரவர்**
**பாதஞ் சேர்தல் பரபதஞ் சேர்வதே.**

சிவனடியார்கள் குற்றமற்ற சுடர்களான சூரியன் சந்திரன் இவர்களையும் மதிப்பினைக்கொண்ட பூமி, நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்களையும் ஆன்மாவையும் கடவுளின் திருமேனியாக அமைடவும். அவர்கள் பரஞ்சோதியான சிவத்தையும் பஞ்சபூத விகாரமான உலகையும் வேறு பிரித்து சிவம் ஒன்றே அறியும் பேறுடையவர்கள். தமது பிறப்பினை ஒழித்துக் கொண்டவர்கள்; அவர்கள் பாதத்தைச் சேர்ந்து கொள்ளலே மேலான முத்தியை அடைந்து கொள்வதாகும்.

**உன்னை எண்ணலர் உம்பரை எண்ணலர்,**
**மன்னை எண்ணலர் மாமலர்ப் பண்ணவன்**
**தன்னை எண்ணலர் தண்டுள வோனையும்,**
**பின்னை எண்ணலர் பிஞ்ஞகன் அன்பிஞேர்.**

சிவபிரானிடம் அன்புடைய அடியவர்கள் உன்னை மதிக்கார்கள். தேவரையும் பொருளென மதியார், இந்திரனை மதியார், பெரிய தாமரைப் பூவில் இருக்கும் கடவுளான பிரமதேவனை மதியார், குளிர்ந்த துளசி மாலை அணிந்த விஸ்ணுமூர்த்தியையும் பெருமையானவர் என எண்ணி மதியார்கள்.

**நாதன் தன்னையும் நாதன தம்புயப்,**
**பாதஞ்சேர்ந்து பரவினர் தம்மையும்**
**பேதஞ் செய்வது பேதமை நீரென**
**வேதங் கூறும் விழுப்பொருள் பொய்க்குமோ.**

நாதனான சிவனையும், அவரது தாமரை மலர் போலும் கழலினைகளை அடைந்து வழிபடும் அடியார்கள் தம்மையும் பேசித்து இரண்டாக எண்ணுதல் ஒருவரின் உண்மையறிவிலாத பேதமைத் தன்மையாகும் என வேதங்கள் சொல்லும் உண்மைப் பொருள் பொய்யாகி விடுமோ;

**செம்மை ஆகிய சிந்தையர் சீரியோர்**
**வெம்மை என்பதை வீட்டி விளங்கினேர்**
**தம்மையுந்துறந் தேதலை நின்றவர்**
**இம்மை தன்னிலும் இன்பத்தை மேவுவார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனடியார்கள் தருமம், ஒழுக்கம் என்பவற்றை உணர்ந்த செப்பமா சிந்தையை உடையவர்கள்; சீரிய சிறப்பினை உடையவர்கள். கொடுமை பாவச்செயல் என்பதை அறவேநீக்கி புண்ணியச் செய்கைகளாலேதேசுடன் விளங்கும் திருஉடையார்கள்; தமது மேலாக உள்ள பற்றைநீக்கி தமது நினைப்பின்றி சிவனை உணரும் தலையான நிலையில் நின்றார்கள், இப்பிறப்பிலே பேரின்பத்தை அடைந்து கொண்டார்கள் (இதனை தன்னைஉணர்ந்து தாமும் ஒன்றின்றி— எனும் கல்லாடர் வாக்கும் காண்க.)

**இன்மை யாவதி யாண்டுமில் லாதவர்,**
**நன்மை என்ப தியல்பென நண்ணினோர்**
**புன்மையான பொருள்விரும் பார்அவர்**
**தன்மை யாவரே சாற்றவல் லார்களே.**

தங்களால் எதையும் அடைய முடியாது என்னும் தகமை எக்காலத்தும் இல்லாதவர், (எங்கட்டு குறைவு ஒன்றும் இல்லை என்பார்கள் நன்மையே எங்கட்கு இயல்பாக எக்காலமும் பொருந்தியது என நன்மை தரு அருள் நெறியே நண்ணினார்கள்; கிழ்மையாகிய மண் பொன் பெண் புகழ் ஆகிய பொருளை விரும்பாதவர்கள். அவ்வாறான கேடும் ஆக்கமும் நீங்கிய திருவுடை அடியார்கள் பெருமையை யார் தான் சொல்ல வல்லார்கள்,

சிவனடியார் பெருமை இத்தகையாயின் இன்றைய மாடாதிபதிகள் நிலை எத்தகையது? மடாதிபதிகள் இன்றைய நிலையில் ஞானிகளோ? அன்றி அடியார்களோ? எவையாகக் கருதப்படலாம் என்பதை நீங்கள் தெளியுங்கள்;

மடங்கள் யாவும் சைவத்தினை வளர்த்தற்குரிய அற நிலையங்களே; இவர்கள் திருக்கைலாய ஞானபரம்பரை எனச் சொல்கின்றார்கள் ஞானத்தின் சீலம் எப்படி? அதைத் தேற வேண்டும்; அடியார்கள் ஞானிகளே! ஞான நிலை அவர்கள் பால் நன்கு தெளிவுறப்படுகின்றது;

ஆனால் மடங்களைக் கவனித்தால் அவர்கள் பொருளின் வளர்ச்சியில் தங்கியுள்ளனர்; அதுவுமன்றி மற்றையோரது கௌரவத்தையும் பெறவு சிலரைக் கௌரவித்தும் இப்படியாக தமது போக்கிற்கு ஏற்றவகை நடக்கின்றனர், இந்த வகை சிவனடியார்கள் நடந்து கொள்ளவில்லையே,

இன்றைய மடங்கள் செய்து வரும் செயலை நோக்கினால் அவர் செயல் ஒருபக்க நோக்காகவே உள்ளனர்; அதாவது தமக்கு வாய்ப்புள்ள வர்க்கு சலுகை மற்றையோரிடம் மௌனம் இத்தகைய ஒருதலைப் பட்சமாக நடந்திடுவார் பரபோக இன்பத்துறைக்கு ஆளாவரே? என்பது சந்தேகம்.

சிவனடியார் பாதம் சேர்தல் பரபத முத்தி சேர்வர் என கந்த புராணம் சொல்வதானால் இன்றைய மடாதிபதிகள் தம்பிரான்களைக் கும்பிட்டு எத்தனை பேர் முத்தி பெற்றார்? யாரும் காட்டவல்லரோ!

ஞான வாழ்வில் ஆசாரத்தில் பணம் ஓர் தூக்கு மேடை எனவே சொல்லலாம். இங்குள்ள மடத்து சாமியார் சிலதிற்கு பேதைப் பிராமணர் சிலர் தலையில் பஞ்சாமிர்தமும் தப்பி தோயவார்த்து பூசைசெய்திருக்கிறார்; அவர்கள் ரபாக்கு வரவில் கொண்டு வரப்படும் பொருள்கள் எப்படி என்பதை நாம் விளங்கியும் பின்னர் ,அவரை ஞானிஎனப்போற்றினால் தோஷம் வராதோ! உண்மையில் அந்தணர்குலத்தின் பெருமையை பெரியபுராணம் நன்கு தெளிவுறக்காட்டுகின்றது அதை விளங்கிக்கொள்வார் மிகக்குறைவு. இல்லை எனலாம். இன்று அந்தணருடைய போக்கை கவனித்தால் முற்பிறவியில் நீசராக இருந்தவரே இன்று பிராமணராக அவதரித்து பிராமணகுலமும் சண்டாளகுலமாகிவிட்டது எனலாம் இன்று பிராமணரிடையே ஆசாரம் என்றால் அது நவநாகரீகத்தில் சாரம் உடுப்பதாகிவிட்டது; ஐயோ! என்னவகையான அருமருந்தன்ன நெறியை அவர் குலத்து முன்புள்ள அந்தணர் கடைப்பிடித்து ஒழுகி அருளால் சிறந்திருந்தனர். ஆனால் இன்றுள்ள அந்தணர் இடாம்பீக வாழ்வு என்னும் இருளால் சிறந்து இருக்கின்றனர்; முன்பு அந்தணர்கட்கு ஆறு தொழில் விதிக்கப்பட்டது; அதில் மெய்ம்மையுடன் நடக்கும் படியும் போலித்தனம் செய்ய வேண்டாம் என்றும் சொல்லப்பட்டது, அதன் காரணம் இந்த ஆறு தொழிலின் ஆட்சியால் தான் கலியின் துயரைப் போக்க வல்லமை பெறுவார் என்றதாகும்; ஆனால் இன்று அந்தணர் குலம் தன் உயர்வை அறுக்கின்ற வேறு வேறு தொழில் புரியத் தொடங்கியுள்ளனர். இதனாலே இக்குலம் இன்று தமக்கும் தமது தருமத்திற்கும் சைவசமூகத்திற்கும் கலி பெருக்குவோராக மாறி உள்ளனர். இது உண்மை, இன்று பெரும்பாலான அந்தணர் நிலை இதுவேயாகும்;

அடுத்து ஏதும் ஞானசீலப்படி ஆசாரப்படி ஒழுகிடாத மடாதிபதிகளை இவர்களும் போய் பூசை பண்ணி கும்பிடுவாராக இருந்தால் அவர்கள் அந்தணர் குலத்தின் சீலத்தை அடியோடு நாசமாக்குகின்றார்; மடாதிபதிகள் சுவாமிகள் அல்ல, ஞானிகள் அல்ல, சிவனடியாரும் அல்ல, அவர்கள் ஓர் தருமநிலையத் தலைவர், ஓர் கோவில் தர்மகர்த்தாவைப் போல் இவர்களுமேயன்றி அதற்கு மேல் வேறில்லை.

# இன்று வேதவழக்கம்அருகி திருநீறு சிவசின்ன நெறி குன்றப்பெறுகிறது

வேதங்கள் ஆதியாவன. அவை உள்ளத்து கேட்கப்பட்டன; நீதியாவன. நின்மலமுமாவன. அவை எந்த யுகத்திலும் பிறந்திடும் எல்லா உயிர்க்கும் பேற்றைத்தரவல்லன. அவைகள் ஒருவன் சித்த சங்கற்பத்தில் கற்பனையில் தோன்றியவை அன்று. அந்தவேதத்திற்கு ஓர் வழக்கம் நடைமுறை நியமம் உண்டு, அவை மக்களை இன்ன வகை நீங்கள் ஒழுகினால் விழுமிய பேற்றைப் பெறுவீர் என வலியுறுத்தின. அந்த வழக்கங்களை எம் சைவப் பெரியோர் அந்தணர்கள் கடைப்பிடித்து ஒழுகி நீண்ட காலசுபிட்சத்தையும் நல் நிலையையும் தாமும் தம்மைச் சார்ந்தாரும் பெற வழி வகுத்து வந்தனர். அந்த ஒழுக்கம் இன்று குன்றியது. எக்காரணத்தில் குன்றியது என்றால் ஐரோப்பிய நாட்டு நாகரீகம் இடைப்புகுந்ததால் அந்த வழக்கம் குன்றியது. வேத வழி ஒழுகுவது ஐரோப்பிய நாகரீகத்திற்கு அறவே தெரியாது. ஆனால் அவர்கள் இயந்திரங்களின் படைப்பில் உலகை மயங்கச் செய்து இயந்திரமயமாக்கியவுடன் மக்களின் மனம் இயந்திரச் சார்புற்றது. இயந்திர மூலம் உடம்பினை வருத்தாது சில சுகங்களை போக்குவரவில் வேறு வேறு தொழில்களில் செயல்களைப்புரிய வசதிகளைக் கண்டவுடன் வேதத்தின் அருமை அதன் ஒழுக்கம் நீதி அனைத்தும் அகன்றன. மக்கள் வேதத்து சொல்லிய நெறியிலும் இயந்திர சாதனத்தைப் பாவிப்பதே மிகு சிரத்தையாகக் கொண்டனர். இந்த இயந்திர சாதனம் உயிருக்கு ஒரு போதும் உதவாது. உயிரின் விழுமிய நிலையைப் பெற இவை மிகுந்த ஒரு தடையாக வந்துள்ளன. இயந்திரச் செயல்கள் வேதம் சொல்லிய நற் செயல்களை நீக்கி அவற்றைக் குன்றச் செய்துள்ளது என்பதை இன்று வேத நெறி உணர்ந்த பெரியோர் யாரும் ஏற்கின்றனர். காலமாற்றம் என்று நாம் இதைச் சொல்லமுடியாது, கலியின் வேகம் எனவே சொல்லலாம். சில அந்தணர் கால மாற்றத்திற்கு அமைய நாமும் மாறிக் கொள்ள வேண்டும் எனச் சொல்லுகிறார்கள். அவ்வணம் சொல்லி காலமாற்றத்துடன் நம் வேதநெறியை மாற்றி இயந்திர மயமாக்கி உள்ளனர். அது முழுவதும் தவறு. அப்படிச் சொல்லி நடக்க முடியாது. அதற்கு ஓர் உதாரணம் காட்டுதும். பெரிய புராணத்து சேக்கிழார் ஓர் செய்தி தருகின்றார், அது எவ்வாறாக இருந்தது என்றால் திருஞானசம்பந்தர் திரு அவதாரம் செய்வதற்கு முன்பாக தமிழ் நாட்டில் எம் சைவ நிலை எப்படி இருந்தது என்பதை நன்கு விளக்கிடும் பொழுது ஆதி அருமறை வழக்கம் அருகி அரன் அடியார் பால் பூதிசாதன விளக்கம் போற்றல் பெறுவகை கண்டு ஏதமில் சீர் சிவபாத விருதயர் தாம் இடருழந்தார் என எடுத்து அப்பாடலில் மொழிகின்றார். அந்த வகையில் சிவபாத விருதயரும் கால மாற்றம் என்ற கொள்கையில் தம் காலத்து பரவி வரும் கொள்கைகட்கு அமைய தம் வாழ்வை அமைத்து நடந்திருக்கலாம். ஆனால் அப்படியிலாது சைவ மக்களிடை வேத நெறியின் வழக்கங்கள் அருகி வரக் கண்டு பெரிதும் சிவபாதவிருதயர் துன்பப் பட்டார் என பெரிய புராணம் கூறுகின்றது. இந்த சிவபாத விருதயர் தான் திருஞானசம்பந்தரின் தந்தை. அந்த இடர்ப்பாட்டினால் அவர் இறைவனிடத்து மீளாத அன்புடைமையால் நாட்டில் வேதநெறி வழக்கம் குன்றிய காரணங்களை அரனடியார்பூதி சாதன விளக்கம் போற்றப் பெறுதவகையையும் உணர்ந்து இவற்றிற்கு தடைவருவிக்கும் புறச்சமய நெறிகளின் விருத்தியைகுன்றச் செய்யும் வலிபடைத்த ஓர் மைந்தனைத்தரும் படி இறைவனை வேண்டினர்.

இந்த மைந்தன் திருஞானசம்பந்தர் வந்து தான் அன்று அருகிய வேத வழக்கத்தை உயர்திக்கொண்டதும்; சிவனடியார் இடத்து திருநீறு உருத்திராக்கம் முதல் பல சாதனங்களைப்போற்றும்படி செய்தார்.

ஆதலால் கால மாற்றம் என்றகருத்தில் வேதநெறி வழக்கங்களைக் குறைத்திட முடியாது; அடுத்து பூதி என்பது திருநீறு; சாதனம் உருத்திராக்கம். இவையின் விளக்கம் இன்று போற்றப் பெறவில்லை என நாம் இங்கு எடுத்துக்காட்டப் போகிறோம்

திருநீறு யாது? உருத்திராக்கம் யாது? அது எதற்காக அணியப்படுகிறது. அது நாம் சிவனுக்கு அடிமையனேம் என்பதை எடுத்துக்காட்டவன்றோ? அல்லது அவ்வேடத்துள் மறைந்து நின்று பணம் சம்பாதித்திடவோ சொல்லுங்கள்?

இன்று எந்த ஒரு பிரசங்கி; ஆணாக பெண்ணாக இருந்தாலும் மேடைக்கு சாமிக்கோலத்துடன் வந்து பரசாரம் செய்து விட்டு கீழேஇறங்கினால் என் செய்கிறாய்? இத்தகைய பரசங்கியள் பணம் பெறுவதுடன் மதுக்கூட உணபவரும் உண்டு, கொலை செய்விப்பவரும் உண்டு, அவருடையநடை போக்கு செயல் அத்தனையும் அந்த திருநீறு பூசிய கொள்கைக்கு ஏற்பதோ? இல்லவே இலலை.

ஞானி என்று தம்மைச் சொல்லும இந்தியாவில் உள்ள மடாதிபதி ஒருவர் இங்கு வந்து இருபத்தி நாலாயிரம ரூபா சேர்த்துக்கொண்டார். கொண்டு போய்க்கொள்ளமுடியவில்லை. பின்பு ஒருமாதிரி உள்ளஒரு பெரியஉத்தியோகத்தரைப் பிடித்து இணங்காதவைக்கு இணங்கிஇங்கிருந்து அங்கால பணம் பொய்ச்சேர்ந்தது; தயவுசெய்து திருநீறு உருத்திராக்கம் முதல் சிவசாதனங்களை போற்றும் விளக்கம இதுதானோ? இன்று கோவில் திருப்பணிச் சபையரை அர்ச்சகரை எடுத்துக்கொள்ளுவோம், சில கோவில் திருப்பணிச சபையின் தலைவர் மது உண்டல் மாமிசம் புசித்தல் முதலிய பாதகங்களைச் செய்பவராக இருக்கிறார், தலைவர் மட்டுமலல சபை அங்கத்தவர் பலரும் இந்த நிலையில உள்ளனர், அதுவும அன்றி சில திருப்பணிச்சபைக்கூட்டங்களில் மது அருந்திய நிலையில அடிபிடி. இப்படியாகக்காவிலை பரிபாலிப்போர நடந்து கொண்டால இது நீதியோ? சொலலுங்கள்; இப்படி நடந்திட தெரிந்தும இவர்கள மதிப்பில அந்தணர் மிகு குதூகலதுடன் சரியாக அருகில் அமர்ந்து சம்பாஷனை செய்கிறார். முன்பு அந்தணர்கள் செய்த ஆறு தொழிலான அவை மாறி இன்று ஏறல் ஏறிவித்தல் சீவல் சீவுவித்தல குடித்தல் குடிப்பித்தல என்றநிலை வந்துவிட்டதே தா

அடுத்து சைவத்தை பரிபாலிக்கும ஓர் சபையின் பொருளாளர் மின்வாங்கி கூடைக்குள் வைத்துக் கொண்டு போவதைக் கண்டு சிவதொண்டன் நிலயத்தைச்சேர்ந்த அன்பர் மிகு கவலை தெரிவித்தார். இதனைவிட இன்று சைவ சபைகளில் திருப்பணிச்சபையில் கடமை ஆற்றுவோர் ஏனைய மக்களுக்கு சைவநெறியில் ஓர் முன்மாதிரி காட்டத் தவறும் பொழுது கோவிலை என்னென்று சரியாக நிர்வகிக்கலாம். அல்லது சைவத்தை சிருடன் வளர்த்திடலாமோ.

சில திருப்பணிச்சபையார் மக்களை கொலைசெய்திட பலாத்காரம் செய்ய எத்தனித்து இளைஞரைக் காடைத்தனம்புரியுமாறு தூண்டு கின்றனர், திருநீறு பூசுவார் அதன் தூய்மை விளங்கினால அப்படியும் செய்ய முன்வரலாமோ? இந்த சபைக்கு பெரும பட்டத்தின் சிறப்புடைய ஓர் பெண் மணி தலைவியாகவும் உள்ளார். அவ்வம்மணியின புறங்காலின் தூசிற்கு சந்திரதீப ஆசிரியர் அருகதை இல்லாதிருந்தாலும சந்திரதீபம இத்தகைய செயலைத தூண்டாது அனுமதியாது!

திருநீறும் உருத்திராக்கமும என்னஎன்று தெரியாதவர்கள் இன்று தெய்வதுரந்தரராக மேடை மேல் மிளிர்கின்றார். அவர் பேச்சு சைபக்கு வசீகரமாக இருந்தால் பலருக்கும் பிடித்தால் அதனால் எழுப்பம் வருவது இயல்பு அதன் உண்மையையும் காலத்தை உண்டு பண்ணும் காலன் உணர்விப்பான் எனவே நம்புகிறோம்

மானிப்பாய் வேலக்கைப்பிள்ளையார் கோவிலில் ஓர் வில்லுப்பாட்டு ஒரு நாள் நடந்தது. அது தொடங்குமுன்பு அவ்வீதியால் நான் போனேன். அப்போது நல்ல திருநீற்றுகுறியிடன் ஒருவர் கழுத்தில் உருத்திராக்கமாலையுடன் வந்து வில்லுபாட்டு குழுவில் ஆமர்காரனாக அமர்ந்தார். அக்குழுவில் ஏனையோரும் வந்தனர் குழுத்தலைவர் ஓர் அந்தணர் அப்போது அந்த குழுவினை எழுதியவர் நமக்கு தெரிந்தவர் போல இருந்ததால் அவரை ஆராய்ந்து கவனித்தேன். அவரை இன்னாரென விளங்கியதும் பகல் முழுவதும் எந்தக்கோலத்தில் திரிவசர் பொழுதுபட வில்லிசைக்குமட்டும் இந்தக்கோலத்தில் இவைகள் எல்லாம் வெறும் ஏமாற்றச் செயல்கள்;

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒருக்கால் யோகசுவாமியிடம் சந்தையில் தரகுவேலை செய்யும் அன்பர் சென்றூர். அவர் திருநீறு நிறைய குறியாக எழுதிக் கொண்டு வந்திருந்தார். அவரை நோக்கி எடே மிகு நல்லாய் இருக்கு! ஆனுல் நாங்கள் உள்ளுக்கு பூசுறனுங்கள் எனச் சொல்லி யது. இதைத்தான் செக்கிழாரும் திருநீற்றைப் பூசுங்கள்,ஆனல் பூசும் திருநீறுபோல் உள்ளமும் புனிதமாக இருங்கள் எனகின் ருர். திருநீற்றைப்பூசிக்கொண்டு செய்யத்தகாதன வற்றைச்செய் யத் தொடங்கினுல் அது திருநீற்றை போற்றப் பெருதனவே! எனக்கு நல்லஞாபகமிருக்கின்றது சைவசபையின் பிரசாரவேலை யை நடத்திடும் ஓர் பெரியவர் தங்கள் சபையின் ஆதரவில் இந்தி யாவில் இருந்து இங்கு வருகின்ற ஒவ்வொரு ஐயா மாரையும் கூப்பிட்டு மடத்தில் பிரசாரம் செயவிப்பவர். அப்படி பிரசாரக் கூட்டங்களுக்கு காசுதிரட்டசபையின் அச்சகத் தொழிலாளியிட மும் காசு கேட்பது வழக்கம், கையெழுத்திட்டதுண்டு போகும், தொழிலாளி வாங்கிவைத்துக்கொண்டு யோசிப்பார். தனது பொரு ளாதாரநிலையில் காசு போடவும் இயலாதுபோடாட்டால் பிரசா ரஅதிபரால் தம் வேலை நிலயில் சங்கடம் வரும். இந்தஇரண்டு சங்கடத்தில் நின்று கொஞ்சநேரம் அவர் தவித்துத்தான் பின் னர் காசு ஏதோ போடப்படும். ஆனுல் அவ்வகையில் பணம் சேர்த்து பிரசார ஒழுங்கு செய்பவர் முதல்தரமான உருத்தி ராக்கமாலை பிரசாரதினத்தில் கழுததில் போட்டு அன்று மட்டும் சிறப்புடன் காட்டுவார்.

உருத்திராக்கம் சிவனுடைய கருணையின் சின்னம் என்பதாகும் கருணையை எப்படி நாம்காணலாம்? இதைச்சேக்கிழாரும்ஆரம் கண் டிகை ஆடையும் கந்தையே பாரம ஈசன பணியல தொன்றி லர் ஈரநெஞ்சினர் யாதும் குறைவிலர் என்கின்றதால் உருத்திரா க்கமணிவாரது ஈரநெஞ்சை எப்படிப் பிரதிபலித்துக் காட்டலாம் சொல்லுங்கள்? பிரசாரம சமயரீதியில் இன்று அருவருக்கத்தக்க நிலையில் தான் இருக்கின்றது.. பிரசாரம எனருல்மக்களிடம்ஒழு க்கத்தைப் பேணிட உறுதிப்படுத்தலே நன்று. நாயன் மாருடைய ரலாற்றை வெறுமனே பேசிப்போவது புண்ணியமன்று. திருநீறு கிழக்குமுகவடக்கு முகமாகநின்று பூசுஙகள் எனவிதி சொல்லிக் கொடுப்பதிலும் உள்ளத்தைபபுனிதபடுத்தி நீறு அணியுங்கள் என் ருல் அது மிக நன்று. விதியிலும் புனிதமே பெரிது. மேடைக்கு பட்டும் குறி எழுதுறபழக்கம் அறவே எம் நாட்டில் ஒழிய வேண் டும், உள்ளத்தின் நற்பண்புகள் வளர்க்கப்படவேண்டும். குடையிற் சாமி என்றஓர் துறவி நம்மிடம் அடிக்கடி முன் வருவார். அவரும் அதிகம் வெளிப்படத் திருநீறு அணிவதில்லை. அப்போது ஒரு நாள் நான் அவரைக்கேட்டேன் ஏன் நீங்கள் திருநீறு அதிகம்பூ சுவதில்லை என்றதாக. அப்பொது அவர் சொன்னுர் ஐயா நான் பல இடமும் திரிபவன். அப்படியான நான் எம்பெருமானுடைய புண்ணியப் பொருளான அதனை எவ்வளவு புனிதமுடன் பூசுதல் வேண்டும் என என் சிந்தையில் உணரும் படி சொன்னுர்.

ஐயா இந்ததிருநீற்றையும் உருத்திராக்கத்தையும் வேதவழக் கங்களையும் பேணிகாத்தலே தொண்டு. இதனைப்பற்றிப் பிரசராம் செய்வோர் ஒவ்வொருவரும் இரண்டினுடைய மாண்பையும் புனி தையும் தன்னில் வளர்ப்பவராகஇருக்க வேண்டும். இதைப்பூசிக் கொண்டு பேசிக்கொண்டு கள்ளக்கடத்தல் மூலம் காசு இங்கிருந் து கொண்டு போய் அங்கிருந்து கொண்டு வந்து; நரகக்குழி போன்ற காமம் வெகுளி மயக்கம் முதலிவற்றை நீளப்பெருக் கும் சினிமாவில் வனெலியில் பாடி நடித்து பேசிநிற்பார் அனைவ ரும் பூதிசாதனத்தின் விளக்கம் பேணுதவரே! போற்ருதவரெ! இவரதுபாதகச்செயலால் திருநீறு சாதனம் ஆகும் சிவசின்னங்கள் மாசுபடுத்தப்பட்டுள்ளன. இவை மூலம் சமயப்பிரசாரம் செய்வதில் செய்யாமல் விடுதல் பெரும் தொண்டாகும். இவற்றை எல்லாச் சைவமக்களும் உம் சிந்தையில் சிந்தித்து தெளியுங்கள். ஆகவே கோவில் திருபணிச்சபையில் கடமை புரிவார் சமயம் வளர்க்கும் சபைகளில் கடமையாற்றுவார் அனைவரும் உலமக்கட்கு திருநீறு உருத்திராக்கம் என்னும் இருபொருளின் உண்மைத்தத்துவமான உள்ளப்புனிதம் கருணை இவற்றைப்பிரதிபலிப்பவராக விளங்க வேண்டும்.

சமயப்பிரசாரகரே நீங்கள் என் மீது கோபம் கொள்ளவேண் டாம். தவறுகள் நேரும் போது சுட்டிக்காட்டல் ஓர்தருமம். அதை நான் என்அப்பன் ஆறுமுகனுக்காகச் செய்கின்றேன். முனிவனுக வந்து எனக்கு சீலம் உணர்த்தி ஆட்கொணட அக் ருணையின் அருளை நீங்களும் பெறலாம். உண்மை வழிக்குத் திருப்புங்கள்,

# யோகசுவாமி கள்ளரையும் ஆதரிக்கிருர் என கவலை கொண்டிருந்தேன்

இவ்வாறு முன்னுள் உதவி கூட்டுறவு ஆணையாளராகக் கட மை ஆற்றி இளைப்பாறிய கரவெட்டியைச் சேரந்த திரு வி.எஸ், பொன்னையா என்பவர் பொலிகணடி கந்தவனம் சுவாமி கோவி லில் வைத்து இக்கருத்தைத் தெரிவித்தார். அவ்வாறு அவர் சொல்லிட வேண்டிவநத சநதர்ப்பத்தை முதலில உங்கட்கு விள க்குகின்றேன். யோகசுவமி நம்மை விட்டு மறைந்ததும் நாம் அவர் ஞாபகார்த்தமாக ஒவ்வொர ஆலயத்திலும் ஒவ்வொரு வெ ள்ளிக்கிழமையும் சென்று பெரியபுராணத்து நாயன்மார் பற்றிய சொற்பொழிவு செயய எண்ணி, அவ்வாறு பல கோயில்களிலும் செய்து வந்து ஓர் வெள்ளிகிழமை கந்தவனத்திலும் பரசங்கம் செய்யப் போயிருந்தேம் அககால அங்கு திருவிழா நடைபெற் றிருந்தது எனஎண்ணுகின்றேன். என்னுடன் நீண்டகால நண்ப ராகி என் பணியை விளங்கி ஆதரித்த மாணிப்பாயைச் சேர்ந்த கூட்டுறவுப் பரிசோதகர் திரு. பொ-செல்வரத்தினம் அன்று குடும் பசமேதராக தமது காரில கந்தவனம் வந்திருந்தார். அவருடன் என் பணிக்கு ஆதரவு தரும் மல்லாகததைச் சேரந்த தி, நெ,ஆ சுவாமிநாதன் அவர்களும் வந்திருந்தார். அன்று அமர்நீதி நாயனுர் வரலாறு பறறப் பேசிக்கொண்டிருநதேன. அப்போது என்றுமிலாத ஓர் அமைதி அங்கு கேட்டிருநதாரிடம் நிலவிட க் கண்டேன். அங்கிருந்த சபையாரில் ஒரு தூண அருகாக மேல தந்த வாக்கியத்தை மொழிந்த திரு, வி. எஸ். பொன்னையா அவர்கள் கண்களை மூடித தியானததில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

எனது பிரசங்கம் முடிந்தது கோவில் எஜமான என் பணி பற்றிச் சில வார்ததை பேசிஞர். இது முடிநததும் திரு பொன் னையா எம்மை நோக்கி வநதார. அந்நேரம் அருகில் திரு செல்வரத்தினமும் சுவாமிநாதனும் நின்றுர்கள் கோவில் எஜ மானும் வேறு சிலரும் நின்ற ஞாபகமுண்டு. அப்போது அவர் செலவரத்தினததை நோக்கி நீங்களும் ஆதரிக்கின்றீர்கள் போ லை இருக்கின்றது. இவரைப்பற்றி நான் உங்கட்கு சில வார்த் தை சொலலப் போகின்றேன என்றுர், எனக்கு திகைப்பாக இருந்தது. அதற்கு பல காரணங்கள் உண்டு. என்சொல்லப் போகின்றுரென ஏங்கியே நின்றேன். அப்போது அவர் சொன் ஞர்.

இங்கு பாருங்கள் இவரும் (என்னைச் சுட்டிக் காட்டி) எனக்குக் கீழ வேலை செய்தவர. ஆனுல் இவர் வேலைக்கு ஒழுங்காக வருவதுமில்லை. அலலாமல் வேலையை ஒழுங்காகச் செய்வதுமில்லை. இவர் யோகசுவாமியின அனபர என்பது தெரியும். என்னடா இந்தாள இப்படிக் கவனக் குறைவாகத திரியுதே. இது தவ று இவரை என்ன செய்ய என்று நான் சில நாள் ஏசிக்கூ டப் பாரத்தேன. இவர திருந்திய பாடாயில்லை இதனுல் இவ ரை எவ்வாறு தணடிக்கலாம் என நினைதது அதற்குமுன் இவர் செயல் பற்றி அககால அரசாங்க அதிபராக இருந்த ஸ்ரீகாந்தாவிடம் சொல்லி அவருக்குசசில புததிமதிகள் புகட்டும் படி சொல்விப்போம் என எணணி ஸ்ரீகாந்தாவிடம் இவரைப்பற் றி முறையிட்டும் பாரததேன. அவர சொல்லியும் இவரிடம் திருததம் காணவில்லை. ஆனுல் நான் கொஞ்சம் இரக்கம் காட்டப் பார்த்தாலும் எனது சிரேஸ்ட ஆணையாளராக இருந்த திரு. ஆர். சி. எஸ் குக் அவாகள் என்னை விட்டபாடில்லை. நல்லையாவில் நடவடிக்கை எடுக்காவிட்டால உம்மில் நடவடிக்கை எடுப்பேன் எனக் கூறினூர. அப்படி இருக்க நான் திரு. குக் இடம் சொனனேன. சரி நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவரும் நானும் இவரை வேலையால் நீக்கும்படியான கட்டளை யையும் பிறப்பிததுக் கொண்டு திரு குக்கிடம் சொன்னேன் ஐயா ஒரு காரியம் செய்வோம். இக்கடிதத்தை இவருக்கு அனு ப்பு முன்பாக நாம் இப்படி இவரை வேலையால் நிற்பாட்டிறம் என யோகசுவாமியிடம் சொல்லி விட்டு காகிதத்தை அனுப்பு

அப்போது திரு குக் சொன்னுர் சரி நானும் வருகிறேன்; இரு வரும் யோக சாமியிடம் போவோம் என்ருர், இருவருமாக ஒரு ஞாயிற்றுக் கிழமை சாயந்தரம் சுவாமியின் ஆச்சிரமத்திற்கு சென் ருேம். சுவாமி எங்களை உள்ளே அநுமதித்தார். நாம் சென்று சில நேரம் மௌனமாக இருந்தோம். அதன் பின் நான் இவரைப் பற்றி ஒருவார்த்தையும் பேசவில்லை, ஆனுல் அப்படிப்பேசலாமோ என நான் நினைக்க முன் நேரே என்னை நோக்கி நல்லையன் பாவம் அவனை நீ ஒன்றும் செய்து போடாதே என யோக சுவாமி சொன்னுர், நான் திடுக்கிட்டுப் போனேன். குக்கருக்கு முகம் ஓடிக் கறுத்துவிட்டது; உண்மையில் எனக்கு அந்த வார்த்தை சகிக்க முடியாததாக இருந்தது அவரிடம் அதை மறுத்து என்னுல் ஒன்றும் பேச நா எழவில்லை நான் மனதில் சங்கடப்பட்டுக் கொணடேன், இதென்ன இது இப்ப டியாக தனது வேலையின் கடமையைச் செய்ய முடியாதவரை தண் டித்தல் முறை. ஆனுல் சுவாமி இந்த விடயத்தில் நீதியிலாது நடக் கிறுரே என்ற எணனம் என்னிடம் இருந்தது. இந்த எண்ணத்துடன் நான் ஆம் சுவாமி அப்படியே செய்கிறேன் என சொல்லிவிட்டு திரு குக் உம் நானும் அவ்விடததால் நீங்கிக் கொணடோம். நீங்கி வரும் போது தான எம்முள் பேசிக் கொணடோம். யோசித்துப் பார்த்தால் யோக சுவாமியும கள்ளரையே ஆதரிககின்ருர். தம் கடமையைச் செய்யாதவர் கள்வரே! அபபடியான கள்ளரும் கும்பிட சாமி அவர் க்கு இரங்குகின்ருர். எமது கடமையை நாங்கள் சரியாகச் செய்திட சாமி தடுத்து விட்டாரே! இது என்ன அநியாயம்; இந்த சாமியின் போக்கு சரியிலலை, என் நிலயில் எனக்கு பிழையான வழியைத் தான் கடைப்பிடிக்கச் சொல்லியுளளார். தண்டிக்கப்படவேண்டியவரை தண்டி யாது விடுத்தல் தவருகிறதே! மற்றைய உத்தியோகத்தற்கு நாம் இனி என் செய்யலாம் என்று பலதும் பேசிக் கொண்டு சுவாமி என்பக் கத்தில் பிழையே செய்துள்ளார என எண்ணினேன்,

இப்படி பல ஆண்டுகள் கழிந்தன, சுவாமியும் எம்மை விட்டு ம றைந்து விட்டார். ஆனுல் இன்று தான் இவருடைய பிரசங்கத்தைக் கேட்க முடிந்தது, உண்மையில் இவரது பிரசங்கம் என் மனதைக் உருகச் செய்தது, ஐயய்யோ இத்தகைய ஒருவருக்கு அல்லவோ நான் அன்று துயரம விளைவிக்க எணணினேன், அப்படிச் செய்யப் போன என்னை யோக சுவாமி தான் செய்யாத படி காப்பாற்றினுர், அன் று சுவாமி தடுத்தது முற்றிலும் என் நன்மைக்காக என்பதை நான் இப்பொழுது உணர்கின்றேன.

யோக சுவாமி உண்மையில் ஓர் தெய்வம், முக்காலமும் உணர்ந் த முனிவன். அவரால் பல நன்மைகள் எம் யாழ்ப்பாண நாட்டிற்கு விளையப் போகின்றது என்பது என் நம்பிக்கை. இவரது பிரசங்கம் ஒரு நல்ல மாதிரியான பிரசங்கம என்மனதில் இதைக் கேட்கும் போது பெரிய ஓர் சாநத நிலையை திருவருட் பேறறை இவர் பிரசங்கம் மூலம் பெ றக் கூடிய தாக உள்ளது. எனக் கூறி பின்னர் என்னை நோக்கி பெரிய தொண்டு செய்கிறீர். இன்னமும சிறந்து விளங்கட்டும் எனக் கூறி விட்டு பின்னரும் சென்னுர் யோகசுவாமி யாழ்ப்பாணத்தார் செய்து கொண்ட ஓர் புண்ணியத்தின் வடிவம். அவர் இருக்கும் போது அவர் பெருமையை நாம் நன்கு உணரவில்லை. அவர் இருக் கும் துணையும் அவர் எங்கட்கு ஓர் கவசமும் காவலும் போல இரு நதவர், அவர் எமக்கு ஈந்த போதனைகள் அத்தனையும் நமக்கு தெய் வீக நிலையில் உயர்வைத் தருவன.

சிலர் அவரைப் பற்றி தவருன கருத்துக் கொள்வதுண்டு தமது போக்கிற்கு இணக்கமாக அவர் இல்லாத போது யாவரும் அவர் மீது குறைகாண எண்ணுதல் இயல்பு. ஆனுல் அந்த மாகான் இவர் களது எல்லைக்கு அப்பாற்பட்டவர். அரசியல் நிலையிலும் நல்ல புத்தி களை நமக்கு சொல்லியுள்ளார; அவரது வார்த்தைகளை நம் மக்கள் நம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்டால் தமிழ் இனம் நல்ல முன்னேற் றமையும் இன்று நல்ல ஒரு சந்தர்ப்பம் நாம் சந்திக்கப் பெற்றது இனியும் இன்னமும் சந்திப்போம் என சுவாமிகள் கதை பற்றி வேறு வேறு கதைகளும் தெரிவித்துக் கொண்டார. நாமும் தான் சொல்கின்ருேம் நாம் உய்யவேண்டின் அவர் காட்டிய சீலங்கள் எம் வாழ்விற்கு மிகவு-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சைவத்தில் இன்று உண்மையிலாச் செய்திகள் தெய்வீகமாக்கப் படுகின்றன

பாம்பாட்டி நாக வராளி ஊதினால் அதற்கு பாம்பு எழுந்து ஆடுகிறது, புற்றில் இருந்த பாம்பும் குறவனது ஓசைக்கு வெளிப்பட்டு வருகிறது. அக்குழல் ஓசைமூலம் குறவன் பாம்பைப் பிடிக்கின்றார். நாகவராளி இராகத்தை நாதஸ்வரத்தில் ஊதினால் பாம்பும் வரும் இவை இயற்கை ஆனால் கூரையால் தற்செயலாக விழும் பாம்பு தாம் பாடிய திருவாசகத்திற்கு வந்ததாக தென்இந்தியப் பிரசாரகரின் திருவாசக மாண்பிற்கு எடுத்துக் காட்டாகச் செய்தி தரப்பட்டால் இது சைவநெறியில் முதல்தரமான ஏமாற்று வித்தை. பாம்பாட்டியின் பாம்பாட்டு வித்தை போல் இதுவும் பேதை மக்களை ஏமாற்றும் வித்தையே. தற்பெருமை மிகுந்த யாழ்ப்பாணத்தவர் இதை பெரிதாகக் காட்டி பொய்யையும் தம் விழாச் செயலில் பெருமை உடையதாக காண்பிக்கின்றனர். காரநகர் சென்று இதனை விசாரித்தால் இதன் உண்மை விளங்கும், இதே பாம்பு முன்னமும் அம் மண்டபத்து வழுக்கி வீழ்வது,

எழுவதீவில் வேல் வருகுது ஓடிவந்து பாருங்கள் என ஆத்ம யோதிகள் ஆகாயமளவில் புழுகுகின்றார், எத்துணை ஏமாற்றம், தன்னில் ஆத்மஜோதி தரிசனம் பெறமாட்டாதவர் வேலை எப்படிக் காணலாம், காட்டலாம். கந்தனுடைய வேல் அவ்வளவு சுலபமானதோ, இத்தகையதாக எத்தனையோ தலையில் தேங்காய் உடைத்தல் முதல் பல செயல்கள் நம் சமய நெறியில் தெய்வீகமாகக் கருதப்பட்டு போற்றுதலும் செய்யப் படுகின்றன. இவை மனிதனுடைய அறியாமையை பிரதிபலிக்கின்றது.

இன்றைய உலகியல் நிலையில் தமிழரது போக்கை அவதானித்தால் ஓர் உத்தியோகம் உமக்குத் தருவோம் நீர் பூசும் திரு நீற்றை அழித்து விட்டு வருவீரோ என கேட்டால் அப்படியே செய்கிறேன் காசு சுலபமான வழி கிடைக்கப் பெறின் எதையும் செய்திட சித்தமாகின்றேன் என்பது வெளிப்படையாகக் காணப்படுகின்றது.

எவ்வாறு நீர் இப்படி ஓர் பழியைச் சுமத்துகின்றீர் என்றால் திரு நீறும் உருத்திராக்கமும் அணிந்து கொண்டு பலர் செய்யும் போலித்தனத்தைக் கொண்டு நாம் உணரக் கூடியதாக இருக்கின்றது.

நம் நாட்டில் பிறசமயத்தவராக இருக்கும் அத்தனை பேரும் தம் பொருளாதார உயர்விற்காக தம் சமயத்தை மாற்றிக் கொண்டவர் இவர்கள் பிறசமயத்தின் உண்மை நிலை உணர்ந்து அச்சமயத்தைத் தழுவினர் அல்ல என்பதை. இன்றைய பிறசமயத்தவரைக் கொண்டு நாம் ஆராயப் புகுந்தால் அது வெளிப்படையாகின்றது.

எமது நாயன்மாரது உண்மை விளைவின் உயர்ச்சியையும் அதனால் அவர்கள் பெற்றுக் கொண்ட அநுபூதிப் பேற்றையும் நாம் விளங்கிக் கொண்டால் அவர் போன்ற உயர்ந்த ஒரு நிலையை நமது பிறசமயத்தைத் தழுவினர் எவரும் பெறவில்லை என்பது வெளிப்படை? எந்த ஒரு சமயத்திலும் விசுவாசம் அவரை மேல் நிலைக்கு உயர்த்தி வைக்கும் உண்மையை உணர்ந்து கொண்டு தம்மில் கட்டுப்பாட்டுடன் நடப்பவர் எவரும் தெய்வநிலைக்கு உயர்த்தப்படுவார் என்பது உறுதி என எம்பிரான் திருநாவுக்கரசர் மொழிகின்றார்.

ஆதலினால் நம் சமயத்து நின்றோர் பிறசமயத்தினைத்தழுவ வேண்டி வந்ததன் உண்மை எமது சைவநெறியில் கொண்ட விளக்கக் குறைவு எனலாகும்.

இந்த சைவ நெறியின் விளக்க நிலை வராமல் போனதற்கு காரணம் நாம் ஆராயப் புகின் நம் மக்களது அக்கறையின்மை என்று மட்டும் சொல்ல முடியாது.

நம் சைவ நெறியில் முதன்மையான நிலையை பெற்றுக் கொண்டவர் அந்தணர்கள். இவர்களது வாழ்வை நிலையை முற்பக்கம் தந்த திரு எழுக்கூற்றிருக்கை என்னும் அப்பதிகத்தில் திருஞான சம்பந்தர் வடிவாகச் சொல்கின்றார், ஆரம்பிக்கும் பொழுதே இருபிறப்பு ஓர்ந்து முப்பொழுது குறை முடித்து நான்கு மறை ஓதி ஐந்து வகை வேள்வி அமைத்து ஆறு அங்கத் தொழில் பூண்டு அதன் முதல் எழுத்தை ஓதி நீளவந்த வேத நெறியின் வரன் முறை வழுவாது ஒழுகி தம் புண்ணியச் செய்கையால் ஏழு வான உலகமும் வளர்க்கும் அந்தணர் என்கின்றார்.

இத்தகைய வாக உள்ள அந்தணரை வாழ்ந்திடும் பொழுது அவர்கள் சிவனருளின் உண்மை உணர்து விளங்கி ஏனைய உலக மக்களுக்கும் வழிகாட்டியாகி தாமும் உயர்ந்த நெறி நின்று ஏனைய மக்களையும் நல் நிலைப்படுத்தி வைத்தார்கள். இருபிறப்பு ஓர்ந்து என்றமையால் தமது பிறப்பின்உயர்வில் வரு உரிமைச்செயல் உணர்த்தபட்டது. ஆகவே இந்த அந்தணர்கள் பிறப்பு ஒழுக்கம் கெட்டவுடன் சைவநீதி அழிந்தது. மக்கள் சைவநெறியில் அக்கறை கொள்ளவில்லை.

பிற்காலத்தில் மேல் நாட்டவர் நம் நாட்டைக்கைப் பற்றிட இந்த பிறப்பு ஒழுக்கம் குன்றிநின்ற பிராமணசமுதாயத்து பலர் உத்தியோக வாஞ்சையால் கலி மிகுந்த மேல் நாட்டவரின் பண்பாடுகளில் நடை உடை பாவனை உணவு வாகனம் இந்தபோகங்களை விரும்பி சில அந்தணர் தம் வாழ்வை மேல் நாட்டு நாக ரீகத்தில் மாற்றி விட்டனர். சமய நெறிகளையும் துறந்தனர் மறந்தனர். பிறப்பொழுக்கம் குன்றுதலாலே தமது நெறியை தாமாகஅழித்தனர். இன்று திருநீறு உருத்திராக்கம் முதல சிவசின்னகளின் உண்மைவிளக்கமின்றி இது ஒரு போலி வியாபாரமாக்கப்பட்டது. அது மட்டு மன்றி எம் சைவநெறியில் நின்ற சிவனடியார் சமயத்தலைவர் எனச் சொல்லப்பட்டவரும் தத்தமது ஒழுக்க நிலைகேட்டால் தங்களில் ஓர் தெய்வீக நிலையைவளர்த்துக் கொள்ளா தவராகி சைவ நெறியில் விழாக்கள் கொண்டாங்கள் இவையும் தம் மனமலர்ச்சிக்கு ஏற்றதாக அமைந்தனரே அன்றி உண்மை நிலையை அவர்கள் காட்ட முன்வரவில்லை.

இன்று சமயநிலையில் ஏமாற்றம் தான் மிகு கின்றது. உதாரணமாக சில குறிப்பிட்ட சம்பகளை எடுத்காட்டாக நினைவு படுத்துகின்றோம்

ஆனைப்பந்தியில் நடராசர் தம் கால் தென்னம்பிள்ளையில் நீட்டியதாக அதற்கு வழிபாடு பூசை. இளாவாலையில் மாதா நாக்காட்டியது அங்கு பூசை; மாவிட்டபுரம் முருகன்கனவில் போய் ஆலயப்பிரவேச அலுவலில் நீவாடா என்று ஒரு அரசியல்வாதிக்கு சொன்னார். எழுவை தீவில் வேல் வருகுது. தேர் திருப்பணிச்சபை பொருளாளரின் கடைக்கு அம்மன் காவல். காரைநகர் சிவன் கோவிலில் திருவாசகத்திற்கு பாம்பு வருகிறது. திருமுருக கிருபானந்த வாரியார்க்கு திருநீறு கொடாதற்கு முருகன் கனவில் போய் நல்ல ஏச்சு. கோவிலால் விலத்தப் பட்ட ஐயருக்காக பிள்ளையார் மதில் மீது குந்தி இருந்தார் இப்படி அப்பாட பலபல கதைகள் புதினங்கள் பல நடைபெற்று நாளடைவில் மக்கள் அதில் அலுத்தனர்

இந்த வகைசிறு துரும்பையும் எடுத்து கயிறுகத் திரித்து இது ஒரு வடக்கயிறு எல்லோரும் நம்புங்கள் என்று காட்டுவதில் இந்தியாவில் இருந்து வந்த எல்லாப் பிரசாரகரும் வல்லுனராயினர். அவர்கள் பேராசிரியராக இருந்தால் என்ன மடாதிப தியக இருந்தால் என்ன பிரசங்கியாக இருந்தால் என்ன அவர்கள் யாவரும் திருநீறு உருத் திராக்கம் இரண்டினது உயர்வையும் சிலத்தையும் உணராது கண்டபடி தம் பொருள் வாஞ்சையில் புகழ்வாஞ்சையில் பேசி தமது கொச்சைமொழியின் இன்பத்துறை மூலம் வேடிக்கை மூலம் சமயநெறிகளை வேடிக்கையாக்கினர். இதனாலே எம் யாழ்ப்பாணமக்கள் உண்மை விளைவை அறியாது அவர் பேச்சிலும் கோலத்திலும் நம்பி தம் சமய வாழ்வை பழுதடைய வைத்துள்ளனர் என்றால் நான்தவறு சொல்ல வில்லை. இப்படியாக பலநிலையாலும் நம் சமயத் தலைவர் பொருளுக்காக தம் சமயநெறியை தம் இட்டப்படி கதை சொல்லத் சொல்லத் தொடங்க பூதி சாதன விளக்கம் சிவனடியார் பால் குன்றியது.

# ஆறுமுகம் கொண்ட கடவுள் ஆர்க்கும் எட்டொணாத தியனப் பொருளாவன்

அறவோர்கள் என்றால் யார்? அதை விளங்கி ஒழுகுபவரே அறவோராகும். அறத்தை உணராதவனாக இருந்தால் கல்விமானையும் நாம் அறிவாளி எனச்சொல்லிமாட்டோம்

வெறுங் கல்விமான்கள் பேராசியர்கள் தத்துவ ஞானிகள் எவராக இருந்தாலும் அவரிடத்து அறத்தின் விளக்கமில்லையேல் அவர்கட்கு தம் கல்வித்திறனால் ஏதும் பயனில்லை. அவர் பேச்சின் திறத்தால் காசு வருமானம் செய்கின்றவரே ஒழிய அவரை நாம் அறவாளி எனச் சொல்லிட முடியாது. இந்த வகையினர்தான் இன்றுள்ள சிவத்தமில் செல்வங்கள் பேதைப் பிராமணர் இந்தியாவில் இருந்து இங்கு வந்து போன எல்லாச் சுவாமியளும் மடாதிபதிகளும் பணம் வாரிகளும் இவர்கள் ஏறி குசாலாகப் போக திறமான கார் வேண்டி வைத்திருக்கும் வியாபாரத்துறை விற்பனர்களுமாகும்.

இங்கு இவர்கள் வந்து சேர்ந்து நடந்துகொண்ட முறைகள் பற்றி ஆராயப் போனால் அவை நன்கு புலப்படும். அறம் என்றால் தருமத்தின் அடிப்படையில் நின்றும் தவநெறிக்கு உயர்தலாகும். ஏனைய எல்லாம் போலித்தனமும் வியாபாரமுமாக முடிவடையும்,

அந்த வகையாக பேராசிரியரையும் பிரசங்கிகளையும் கல்வித் துறையில் சாமர்த்தியம் உள்ளவரையும் பாட்டுக்காரர், இசைக்காரர், நடனக்காரர் இவரனைவரையும் நீங்கள் கோவிலில் அழைத்து வந்து மிக்க கௌரவங்கள் செய்தாலும் நாம் அதைப் பார்த்து இவர்கள் அல்ல கோவிலில் கௌரவிக்கப்படவேண்டியவர். கோவிலில் சிவனடியார்க்கே கௌரவம் கொடுபடல் வேண்டும் என்று என் பத்திரிகையில் வற்புறுத்தி கருத்துத் தெரிவித்தோம். இதை நான் உங்கள் நன்மைக்காக வாசகரின் வாழ்வுக்காக எடுத்துக் காட்டினோமேயன்றி இவர்கள் மீது குரோதம் கொண்டல்ல. எமக்கு சிவத்தமிழ் செல்விகளை சிவிகையில் ஏற்றி கி. வா. ஜெகநாதன் போன்றோர் விமர்சனம் செய்ய விழா எடுக்கலாம். ஆனால் அப்படியாக அறம் தெரியாதவர்களை நீங்கள் மேம்பாடு செய்தால் வருங்கால சந்ததியின் பிள்ளைகட்கு திருவருள் உணரும் வாய்ப்பில் பெரும் துரோகம் செய்தவராவீர்.

என்னென்று அவ்வகை சொல்வீர் என்றால் குமர குருபரர் முருகப்பெருமானிடம் ஓர் வேண்டுதல் செய்கின்றார். ;அது ... என்னை விடுத்து ஆயும் பழைய அடியாருடன் கூட்டி ... துய்ப்பித்து; என்று கூறுவிட்டு பின்னரும் சேய அடியேற்கு உன் பூங்கமலக் கால் காட்டி கொண்டு; எனக் கூறுதலால் இன்றைய பேச்சாளர் என்த்தில் காசில் மற்றும்எல்லாப் பேச்சாளரும் தோயும் பொருள்கள் நமக்கு தெரியாது தோய்கிறார். மடாதிபதிகள் பஞ்சாமிர்தத்தில் வாரியார் போன்றோர் என எண்ணவேண்டாம்.

நம்மை இந்த நெறி தவறும் பிரசாகரும் பேதைப் பிராமணரும் கொலை செய்ய எத்தனித்தாலும் சவுக்கார முதலாளிகள் அவர்கட்கு கார் வசதி செய்து கொடுத்தாலும் விளக்கமிலாத காடைத்தனம் மிகுந்த தொண்டர் என்னும் பேரில் சண்டித்தனம் முதல் பல பாதகங்களையும் செய்து எடேய் மச்சான் பார்த்தியேடா செய்து வைச்சோம் அவரை சிப்பிலியாட்டிப் போட்டோம் என தங்களுக்குள் பேசிச் சிரித்தாலும் துர்க்கை முதல் எத் தெய்வங்களும் என்னை அழித்திட முயன்றாலும் சிவனடியார் சீலமும் இன்றைய போற்றுதலுக்குரிய பாதகரின் அபசாரச் செயலையும் நாம் அம்பலமாக்கி எம் யாழ்ப்பாண மக்களுக்கு உண்மை எது என எடுத்துக் காட்டவே போகின்றோம்.

இன்று பல பாதகரால் நம் உடலிற்கு தீங்கிழைக்கப் பட்டாலும் என்றுதல் வருங்கால சந்ததியில் உள்ள தமிழ் மக்கள் உண்மை உணர்வார்கள். உண்மையைப் போற்றுவார்கள். பொய்யை நிராகரிப்பார்கள் என்பது என் மனத் துணிபு.

நீண்ட பல காலமாக போலித்தனத்தால் பொய்யால் நம் சைவநெறி அழுக்கடைந்துள்ளது. இதனை புனிதமுற நாம் நாயன்மார் காட்டும் நல் வழிகளைச் சொல்லி உங்களை மேல் நிலைக்கு உயரச் செய்தலே என் மேலான பணி. என் நிலையில் ஏதும் போலியோ கபடமோ இல்லை.

கந்தபுராணத்தை ஆராயப் புகுமுன் சில நல்ல நெறிகள் முருகனைப் பற்றி சொல்லப்படுகின்றது, அவன் சிந்தையால் அளக்கமுடியாதவன். சீலமில்லாதவரால் உணரமுடியாதவன். மனிதனுடைய இயல்பில் அவனை அறிய முடியாது. அது மிக மிகக் கடினம். அவன் திருவருள் பெறறோர் இந்தப் பெரிய அண்டங்கள் யாவையும் ஆட்சி புரிவார்கள். அப்படியான ஒரு நிலையில் அவனை அறிவது தூய நெறியினலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை துர்க்கை கோவிலில் துட்டத்தனங்கள் துரிதமடைகின்றது

## கோவிலில் அபசகுனச் செயல்மூலம் அருளிலாமை காட்டுகின்றது. திருப்பணிச்சபை வன்செயல் மிகுகின்றனர். குறைகளைக் காட்டி திருந்த வேண்டுவார் மீது சீற்றம். ஊருக்கு சிவத்தமிழின் உபதேசம். தன் கோவிலில் அவச்செயலின் அட்டகாசம். நாம் சொல்வதில் சொன்னதில் ஏதும் தவறில்லை என்பதை திருவருள் நீரூபித்துள்ளது

## சந்திரதீபம் முற்றிலும் திருவருள் வசப்பட்டது.

சமீப காலங்களில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலில் வன்முறை தலைதூக்கி உள்ளது. அங்கு கும்பிடச் செல்வார்கட்கு நீதியும் அருட்தன்மையுமிலாத செயல்கள் வருந்தத் தக்கன சில திருப்பணிச் சபையாரால் அடக்கு முறையில் நடத்தப்பட்டன, தமது கால் செருப்பையும் கழட்டிஅடிக்க எடுக்கும் அளவிற்கு வன்செயல்கள் நடைபெற்றன. தருமம் யாது? அதன் செயல் யாது?என்பதைக் கொஞ்சமேனும் சிந்தியாவகை கோவிலை நடத்த முற்பட்டால் இத்தகைய வன்முறையின் ஓர் நிலையில்தான் மனிதனை அந்த விளக்கமிலாத செயல இழுத்துச் சென்றுவிடும் என்பதற்கு நாம் குறிப்பிடும் செயல்கள் சான்று பகர்கின்றது.

தெல்லிப்பழையில் புதுத்தேர் அடிபட்டு யாளி முறிந்ததும் மணிகள் அறுந்து வீழ்ந்ததும காயப்பட்டதும் சாமிவீழ்ந்ததும் காயப்பட்டதும் வேறு வேறு பத்திரிகைகளில் செய்திகள் பிரசுரமாயின. நாமும் தான் அதை எம பத்திரிகையில் பிரசுரித்து நெடுங்காலமாக நம கோயில்களில் நடந்து வந்த நடைமுறைச்செயல்களை மாற்றி அமைத்திடும் போது அசம்பாவிதம் ஏற்பட்டால் அதைக் கொஞ்சம் சிந்தித்தல் நலம். பிழைகள் அசம்பாவிதங்கள் ஏற்படும் பொழுது தொடர்ந்தும் தொடர்ந்தும் வன்முறைப் போக்கைக் கடைப்பிடித்தல தகாது; சிந்தித்து தெளிந்து தக்கன செய்தல் தான் பெரியோரது செயல் முறையாகும் என நம் பத்திரிகை மூலம் கருத்து தெரிவித்தோம்.

நமது கருத்தை கோவில் திருப்பணிச்சபையார் சிலர் தவருன வழியில் எண்ணிக் கொண்டு நான் தங்கள் கோவிலில் குறை காண முற்படுகின்றேன் என நினைந்து கொண்டனர். இந்த நினைப்பால் திருப்பணிச் சபையில் இருவர் என்னிடம் நேரில் வந்து தங்கள் கோவிலைப் பற்றி நான் தவருக என் பத்திரிகையில் குறிப்பிட்டேன் என தம் வருத்தத்தைத் தெரிவித்தனர். அப்போது நான் அவர்களை நோக்கி; ஐயா தவருன வகை நான் எழுதி இருந்தால் தயவு செய்து அதை மன்னித்துக் கொள்ளுங்கள் எனக் கேட்டுக் கொண்டேன், அவர்கள் அத்துடன் அக்கோவிலைப் பற்றி இனி எதுவும என் பத்திரிகையில் குறிப்பிட வேண்டாம் என்று சொல்லினர். அவரிடம் நான் சொன்னேன இப்பத்திரிகையை ஆரம்பித்த நோக்கம் இன்று மக்களிடை தருமத்தையும் தவத்தையும் எடுத்து புகட்டி அதன் மூலம் நாட்டில ஓர் நல் நிலையை உருவாக்க எண்ணிக் கொண்டதாகும். எனக்கு தங்கள் கோவிலில் தனிப்பட்ட குரோத மனப்பான்மை எக்காலமும் இல்லை. அது வராது. அது நமக்கு தேவையில்லை. ஆனால் கோவில்களில் நடைமுறைகள் மாற்றமடையும் போது அவை தருமத்திற்கும் தவநெறிக்கும் ஒவ்வாதனவாக இருந்தால் அவற்றைச் சுட்டிக் காட்டுதல ஓர் பத்திரிகை ஆசிரியர் என்ற கோதாவில் நமது கடமையாகும். இந்த ஒரு நிலையில் இன்னொருவருக்காக இதைத் தெரிவிப்பதா அல்லது தெரிவியாது மறைப்பதோ தகுதியற்ற செயலாகும என்றேன். அப்பொழுது முன்னாள் யாழ்ப்பாணப்பகுதி கல்வி அதிகாரியாக இருந்து கடமை ஆற்றி இளைப்பாறிய திரு தியாகராசா என்னை நோக்கி ஆம் நீங்கள் சொல்வது சரி. பெண்கள் தேர் இழுத்த விடயத்தில் அது தவறு என்று சொல்வதற்கு பூரண உரிமை உங்கட்கு உண்டு. அதை நாம் குறிப்பிடவில்லை. ஆனால் தேர் அடிபட்டு யாளி முறிந்தது என்று எழுதியிருந்தீர்கள். அது தவறு அது முறியவில்லை. தேர் போய தேர் முட்டிச் சுவரில் முட்டியதால் யாளி ஒரு பக்கம் திரும்பியது அவ்வளவு தான. அதை பெரிதாக எடுத்துக் காட்டுதல் நன்றல்ல. இன்று வளர்ச்சியடைந்து வரும் கோவிலில் சில குறைகள் காணப்படின் அது நற்செயலாகக் கருதப்படமாட்டாது. ஆகையால் எதையும எழுதும் போது தீர விசாரித்து எழுதுங்கள் என்ருர். அப்போது அவரிடம் நான் சொன்னேன் ஐயா உங்கள் துர்க்கை அம்மன் கோவில் முன்பு கவனிப்பார் அற்று கிடந்த போது அதனை புனருத்தாரணம் செய்ய ஒரு திருப்பணிச் சபை ஆரம்பிக்கும் தினத்தன்று முதல் அக்கோவில் ஓர் பிரசங்கம் செய்ய அக்காலத்து அக்கோவிலை நல்நிலைக்கு கொண்டு வர பெரும் ஊக்கமெடுத்த திரு பொன்னம்பலம் என்பவர் என்னிடம் வந்து ஆரம்பத்திற்கு நீ தான் முதல் பிரசங்கம் செய்ய வேண்டும். நீ வா என்ருர். நானும் அங்கு வந்தேன். பரவையுன் தூது போன மாண்பு பற்றி பிரசங்கம் செய்தோம. நீங்கள் தலைமை தாங்கினீர்கள். ஞாபகமிருக்கும் என நினைக்கின்றேன். அன்றெல்லாம் என எண்ணம இக்கோவில் நன்நிலையடைந்து சிறக்க வேண்டும என எண்ணியே நான் அதைச் செய்தேன். இன்று நான் பிரசங்கம் முதற் செய்து ஆரம்பித்து வைத்த கோவில் வளர்வதை நான் குரோத மனம் கொண்டு காண்பேனே? அது எக்காலமும் என் நிலையிலும் இல்லை என்றேன்'

அப்போது அவர் சொன்னார் ஆம் எனக்கு நல்லஞாபக மிருக்கின்றது. நீங்கள் உங்கள் வாழ்நாளில் பல தொண்டுகள் செய்கிறீர்கள் கந்தபுராணத்திற்கு யோகசுவாமியின் ஆசியால நீங்கள் செய்த தொண்டை நான் உணர்கிறேன். அதை நாம் பாராட்ட வேண்டும என்று இவை போன்ற பல கதைகளையும் கதைத்தோம் அப்போது அருகில இருந்த கணேசஐயரத்தினம் என்பவர் நான்சிவத்தமிழ் செல்வியிலும குறைகாண முற்படுகிறேன் என்ருர், நான் சொன்னேன. ஐயா நான் அவரில குறை காண முற்படவில்லை. இன்று கோவில்களில் எத்தனையோ சைவநெறிக்கு தகாத செயல்கள் நடைபெறுகின்றன. அவற்றையெல்லாம் இவர்கள் சமயத்தல் கௌரவ நிலை உள்ளவர்கள் தெரியமல் இல்லை. தெரிந்து கொண்டு அவர் மதநயல இவர்கள் பேசும் போது அக்குறைகளையும சுட்டிக் காட்டல் மரபாகும். அதை விடுத்து வெறும் பேச்சுடன் போனால் பேச்சைக் கேட்டு மக்கள் எழுந்து போவார்கள் அன்றி நெறிக்குரியவகை அவர்கள் திருந்தார்கள். அடுத்து உங்கள் சிவத்தமிழ் செல்வியை மட்டும் இந்த ஒரு செயலில் நான் குறிப்பிடவில்லை, பொதுவாக எல்லாச் சமயப் பிரசாரத் தலைவர்களையும் மக்களிடம் நன்நெறிகளை வற்புறுத்திச் சொல்ல தவறுகிறீர்கள் என்பதைக் சுட்டிக் காட்டியுள்ளேன். அதை நீங்கள் தவருகக் கருதக் கூடாது. பிள்ளைகள் தவருக நடந்திடும் போது அப்பிள்ளைகளைப் பாதுகாப்பாரை ஆசிரியரை நீங்களும் இதில் பொறுப்பு என்று கூறுவது முறையன்று. அவையும் நடந்து வரும் மரபு தான் என்றுஅவர்கட்கு விளக்கம் கூறி நான் என் பத்திரிகை மூலமாக எவரையும் அவமானப் படுத்த எக்காலமும் நினையேன் எனக் கூறி விடுத்தேன்.

இது இப்படியாக இருப்ப துர்க்கை அம்மன் கோவிலில் தேர் இழுத்த போது நடந்த அசம்பாவிதங்களைப் பற்றி தெல்லிப்பழை அல்லாது மல்லாகம் ஆகிய கிராமத்து வாழும் எவரேனும் நம்மிடம் செய்தி தெரிவித்தவர் அன்று. இச்செய்தியை வேறு வேறு கிராமங்களில் இருந்து தேர் விழாவைப் பார்க்கப் போனவர் நேரில் கண்டு தெரிவித்த செய்திகளை கொண்டே என் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளேன். இந்தச் செய்தியை குறிப்பிட்ட பத்திரிகை ஒன்றை திரு பொன்னம்பலத்திற்கும் தபால் மூலம் அனுப்பி வைத்தேன். காரணம் அவர் துர்க்கை அம்மன் கோவிலில் முன்பு கொண்டிருந்த அக்கறை நன்கு நான் அறிவேன். அப்படி அனுப்பி விட்டு ஒரு நாள் மாவிட்டபுரம் போய் இரவு எட்டுமணிபோல் திரும்பி வரும் பொழுது திரு. விஸ்வநாதன் என்பவரை வழியில் சந்தித்தேன். அவரும் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தார். இருவரும நாம் பல கதையும் கதைத்து பத்திரிகையைப் பற்றியும் கதைத்து தனக்கு இப்பத்திரிகை நடக்குது என்பது தெரியாது. மாமாவிற்கு (பொன்னம்பலம்) நீங்கள் அனுப்பிய பின் தான் எனக்கு இதைப் பற்றி தெரியும். நல்ல விடயங்கள் சில அதில் இருக்கு. இதற்கு முன் நீங்கள் வெளியிட்ட பத்திரிகைகளில் ஒவ்வொரு பிரதி நமக்கு வேண்டும். தாருங்கள் இனி எழுதும் போது கோவில் கிரியைகளில் நடைமுறைகளைப் பற்றி நல்ல குருக்கள் மாரைக் கொண்டு கட்டுரை எழுதி அதைப் பிரசுரியுங்கோ! கோவிலில் எப்படி நடக்க வேண்டும் என்பது பற்றியும் கட்டுரைகள் இருந்தால் அது பெரிய தொண்டாகும் என பல கதையும் கதைத்துக் கொண்டு வந்தார். ஆனல் துர்க்கை அம்மன் கோவில் விவகாரம் பற்றி அன்றோ அதற்கு முன்போ என்னுடன் ஏதும் கதைத்தவர் அன்று. இப்படி நாம் கதைத்து வரும் வேளையில் அவரை ஒருவர் இடையில் ஏதோ கதைக்க மறித்தார். அவர் தாமதித்துக்கொண்டு என்னை நோக்கி நீங்கள் போங்கோ எனக்கு இங்கு அலுவல் இருக்கின்றது எனக் கூறினர்.

நான் அப்பால் போனேன் அப்போது அவரை இடைமறித்தவர் யார் இவர் எனக் கேட்டார். அவர் என்னைக் காட்டி இவர் தான் சந்திர தீபப்பேப்பர் நடத்துபவர் என்ருர். இந்த வார்த்தைகள் அவரை விட்டு நீங்கிப் போகும் என் காதில் கேட்கக் கூடியதாக இருந்தது.

நான் வீடு சென்றேன். இது முடிந்து அடுத்த பத்திரிகையும் வெளிப் படுத்திய பின்னர் அவற்றைக் கொண்டு சுண்ணாகம் மாவிட்டபுரம் தெல்லிப்பழை முதலிய இடங்களில் பத்திரிகை விற்பனை செய்வாரிடம் எனபத்திரிகையும் கொடுத்து விற்கச் செய்பவன். அதற்காக வேண்டிய அப்பத்திரிகையை எடுத்துச் செல்லும் போது திரு விஸ்வநாதனிடம் கொடுக்கும் படி இதுகாறும் வெளியிடப்பட்ட பத்திரிகைகளில் ஒவ்வோர் பிரதி எடுத்துச் சென்று அவரை அன்று சந்தித்து பத்திரிகைகளைக் கொடுக்கும்போது அவர் சொன்னர் ''இங்கு பாருங்கள் அன்று தற்செயலாக வழியில் உங்களைக் கண்டபின் இங்கு என் நிலமை மோசமாக இருக்கின்றது. திருப்பணிச் சபையின் தலைவியும் சிலரும் நான் தான் உங்களுக்கு இங்கிருந்து புதினம்தந்து பேப்பரில் போடச் செய்விக்கிறேன என என்னை கூட்டத்தில் காரசாரமாகப் பேசி கண்டித்தனர். நான் இப்பொழுது கோவிலிற்கு போவதைக் கூட நிறுத்திக் கொண்டேன். உண்மையில் இது மெத்த அநியாயமாக இருக்கிறது. உங்கள் மேலும் அவர்கட்கு ஆத்திரம் இருக்கு இரவு வேளைகளில் கண்டபடி திரியாதையுங்கள் என எச்சரித்தார்.

இதைக் கேட்டவுடன் என மனம் மிகு வேதனைப் பட்டது. ஏன் என்ருல் அப்பிள்ளை ஏதும் துர்க்கை அம்மன கோவில் நிகழ்ச்சி பற்றி என் பத்திரிகையில் பிரசுரிப்ப புதினம் தந்தவரும் அன்று. அல்லது இப்படி எழுதுங்கோ என்று சொன்னவரும அன்று. இப்படி இருப்பிதைப் பிள்ளை மீது காரசாரமான கண்டனம தெரிவிக்கப்பட்டால் அது தவறு. அதுவன செயல் அடக்கு முறையேயாகும்.

கோவில் எல்லார்க்கும் பொது இடம். அது சில ருணபபட்டவரின் சொத்து அன்று. இராஜகோபுரம எத்தனையோ இலட்சம ரூபாவில் கட்டுவித்தவரும் அம்பாளுக்கு ஒரு போத்தல பால அபிடேகத்துக்கு கொடுத்தவரும எல்லாரும் அமபாள் அடியவர். இதை உணராது இராஜகோபுரம் கட்டிவித்தவர் நான் கோபுரம் கட்டுவித்தனான் நீ பால் மட்டும் கொடுத்தனி. உனக்கு கோவிலைப் பற்றி பேச உரிமை இல்லை என்று சொல்லமுடியாது. அது நீதியன்று.

கோவிலில் சில குறைகள் காணப்பட்டால் அதனைப்பற்றி கேட்க ஆருக்குமே உரிமை உண்டு. இல்லை என யாரும் சொல்ல முடியாது. ஏதும் குறை காட்டப்பட்டால் அக்குறையை உணர்ந்து அதில் உண்மை இருக்கின்றதோ என ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுப்பதுடன் குறை இல்லாதிருந்தால் குறை சொன்னரிடம் நீங்கள் சொன்ன குறைகள் இங்கு நடைபெறவில்லை. என அன்புடன் அவரிடம் தெரிவிப்பது தான் தெய்வசந்நிதானம் என்ற இருப்பிடத்துக் காணப்பட வேண்டிய நீதியாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது இன்றல்ல தமிழ் அரசர் காலத்தும் குறை காணப்பட்டால் அதைப்பற்றி அரசரிடம் முறைப்படுதல் இருந்தே வந்திருக்கின்றது. குறை சொல்வாரில் கோபிப்பது அது அறிவுடைய செயல் அல்ல, வன்செயல் அது காடைத்தனம் என்று சொல்வதில் கூட தவறு இல்லை என நான் எண்ணுகின்றேன். இப்படியான நிலை என் பத்திரிகையில் வெளி வரும் செய்திகட்கு அவர் தான் பொறுப்பாயிருத்தார் எனக் குற்றம் சாட்டினுர் என்பது கேள்விபட்டதும் என்கவலை நிடித்தது. அப்போது அவரிடம் சொன்னேன் தம்பி கவலைபாடதையும். என்னைப்பற்றியும் நீர் சிந்திக்க வேண்டாம், நாம் முருகன் திருவருளை நம்பியே இப்திரிகைப் பணியைப்புரிகின்றேன். இதில் எழுதப்படும் ஒவ்வொருஎழுத்தும் அவனுக்கு இடும் மலரேயாகும். என்பணியில் கபடம் இல்லை. பொய் இல்லை. வன்செயல் இல்லை. தவறு எனக் கருதப்பட்டதை எழுவது என்பணி அதனுல் நன்மை வருவதும் தீமை வருவதும் அவன் செயல். நாம் அதற்கு பொறுப்பில்லை. இன்றைய அமைப்பில் உயர்ந்த தெய்வ அருள் நிறைந்த எம் சமயத்தை மிகு கீழ் நிலையில் சமயவாதிகள் கொண்டு வந்துள்ளனர் எனக் கூறி விட்டு அவரிடம் விடைபெற்றுச் சென்றேன்.

அதற்குப் பின் அவரை நான் இருமுறை சந்தித்த போது திருப்பணிச்சபையார் தம் மீது கொண்ட அவநம்பிக்கையை தீர்ந்தபாடில்லை இன்னமும் கூட்டங்களில் தன்னைத் தான் குறை கூறிப்படி திரிகின்றனர் எனக் கூறி தன் கவலையைத் தெரிவித்தார்,

இவர் மட்டுமன்றி திருப்பணிச் சபையில் சிலரும் சில இளையஞரும் தங்களுடன் பண்பிலாத வார்த்தைகள் பேசிக் கொள்வதாகச் செய்திகள் பலவற்றை நமக்கு சொல்லி உள்ளனர். இது மட்டுமன்றி திருப்பணிச்சபையார்க்கு கோவிலில் இடம் பெறும் பாதக நிலை பற்றி சுட்டிக் காட்டிய கடிதங்களின் பிரதிகள் சில கையெழுதில்லாதத் கடிதங்கள் மூலம் அனுப்பி வைத்தனர். இவை மட்டுமன்றி நமக்கு பல பயமுறுத்தல் கடிதங்களும் வந்துள்ளன. இதனுலே நாம் நமக்கு வரும் கருத்துக்களை ஏற்று நல் அறிவை சொல்லிட இப்படியாக கோவில்களில் காடைத்தனம் மிகுகின்றது என்ன இதழ் 25 வது சுடரில் குறிப்பிட்டுள்ளேன்.

பெருபபாலும் அசுரத் தன்மையை தன்னிடம் பெருக்குவார்க்கு பெண் ஆக இருந்தாலும் ஆண் ஆக இருந்தாலும் அவரில் குறை கூற முற்படுவார் மீது கோபிப்பது இயல்பு. காடைத் தனத்தை தன்னிடத்துக் கொண்டவன் தனது செயல் எதிலும் தான் வீரம் காட்ட எத்தனித்திடுவனே அன்றி பழி பாவம் இவற்றிற்கு அஞ்சான். அவன் இயல்பு தன் கொள்கையில் இவரும் பிழை சொல்லவோ என்று தன் ஆற்றலால் பிறர்க்கு அல்லல் பல புரிந்து ஆற்றல் இல்லாரை கொலை செய்தோ அடித்து ஒடுக்கியோ தன் செயலை மேலோங்க வைப்பரே அன்றி தாங்கள் செய்யும் தவற்றை ஏற்கவும் மாட்டார் அத்தவற்றை உணர்ந்து திருந்தவும் மாட்டார்.

சென்ற வியாழக் கிழமை மாலை வேளை தெல்லிப்பழை வீதியால் போகும் போது முன்பு என்னிடம் கந்தபுராணம் வாங்கி அதன் பிசகு இன்னமும் தீராது இருக்கின்ற ஒருவரைக் கண்டேன். கண்ட போது நட்புரிமையால் இன்னமும் ஞாபகத்தில் வைத்துள்ளியளோ என மிகு தயவுடன் கேட்டேன்.

உடன் அவர் ஓகோ உன்னைக் கன நாள் தேடினனுன். இன்றைக்குத்தான் அகப்பட்டாய் என்றுர். நான் உண்மையில் இவர் என் பணம் தரத்தான் சொல்லுகிறுரோ? என எண்ணியதும் தொடர்ந்து அவரிடம் இருந்து கடும் வசனங்கள் வரத் தொடங்கின. நான் திகைத் திருப்ப சரி இஞ்சாலை கானுக்கை வா கனக்க கதையிருக்கு நீ உலகை திருத்திப் போடுவியோ உன்னுல் முடியுமோ என்ன துர்க்கை அம்மன் கோவிலைப் பற்றியும் அந்த மனுசியைப்பற்றியும் தாறுமாறய் பேப்பரில் எழுதுறய் என்று கொண்டு அங்குள்ள சில இளைஞரை அழைத்து இவர்தான் சந்திர தீப ஆசிரியர் என்றதும் அவர்களும் வந்து மிகு வேகமுடன் என்ன கண்டபடி காடைத்தனம் என்று எழுதிறியள் கவனம் என்று எச்சரிக்கை செய்தனர். அதில் ஒருவர் முன்னுள் புராணத்திற்கு பயன் சொல்லும் நாகலிங்கத்தின் மகன் என்று சொன்னுர். பின்னர் என்னை மறித்தவர் என் முதுகில் தட்டி இது இந்த வழியால் இனி வந்தால் உயிருடன் திரும்பாது என்று விட்டு சரி இனி நீ கோவிலைப்பற்றியோ சிவத்தமிழ் செல்வியைப் பற்றியோ எழுதினுல் பிழைவரும் என்றுர். அப்போது அவரிடம் நான் கோவிலில் நடக்கும் குறைகளை எடுத்துக் காட்டவே பத்திரிகை நடத்துகின்றேன் எனக்கு சார்பும் உண்டு எதிர்ப்பும் உண்டு. நீங்கள் எழுதவேண்டாம் என்றுல் நான் எழுதவில்லையே பிறகு ஏன் பிரச்சனை என்றேன். அதன் பின் பலதடவை எச்சரித்து என்னைப் போகவிடுத்தனர்.

நான் அங்கு நின்றும் போய் அருகில் உள்ள ஒரு பத்திரிகை விற்பனையாளர் அவர் என் பத்திரிகையும் வாங்குபவர். அவரிடம் சென்று என்பத்திரிகைகளை விற்பனைக்கு கொடுத்து அவருடன் பேசிக் கொண்டிருக்கும் பொழுது முன்கண்டவரும் அந்த இளைஞரும் வேறு சிலரும் பலருமாகக் கூடி கடைவாய்தலில் வந்தார்கள். வந்தவுடன் முன் என்னை வழி மறித்தவர் கடைக்காரரை நோக்கி பொன்னையா கணக்கை முடித்து ஆளை வெளியாலை விடு அவ்வளவுதான் உன்னைக் கேட்பது என்று மிகு ஆத்திரத்துடன் சொல்லி விட்டு என்னை நோக்கி வந்தார். நான் என்ன விடயம் அப்போது தானே உங்களிடம் என் நிலை சொல்லி விட்டேனே! பிறகு என்ன என்றேன். அவர் மிகு ஆத்திரத்துடன் என் கையில் வைத்திருந்த பேப்பர்களை திடிரெனப் பறித்தார். பறித்துக் கொண்டு வா கோவிலடிக்கு உன்னை அங்கை வைச்சுத்தான் கேள்வி கேட்க வேண்டும் என்றுர்

அப்போது இந்த நிகழ்ச்சி நடைபெறும் முன் இரண்டொரு நாட்களுக்கு முன் அந்தக் கோவிலடியில் கள்ளன் என்ற கோதாவில் ஒருவர் பிடிக்கப் பட்டுச் சென்று சித்திரவதைக் குள்ளானுர் என்ற சம்பவம் ஒன்று கேள்விப் பட்டிருந்தேன். கோவிலடிக்கு வா என்று ஆத்திரமுடன் இவரும் இவருடன் வந்த பல இளைஞரும் நெருக்கி என்கையைப் பற்ற எனக்கு மிகு வேதனையாகவும் பயமாகவும் இருந்தது. ஓகோ இவர் இன்று என்னை அங்கு அழைத்துச் சென்று ஏதோ வஞ்சனை செய்யப் போகின்றுர். சரி நான் என் செய்யலாம் கடவுளே நான் என் செய்யலாம் என்று என்னை வழிமறித்தவரிடம் தயவு செய்து என்னைத்துயருறுத்தாதீர்கள் நான் வரமாட்டேன் என்றேன். மிகு தாழ்மையான வேண்டுதலுடன் சொல்லவும் அவர் விட்டபாடில்லை. என்கைப்பற்றி இழுக்கத் தொடங்கி விட்டனர். இந்த நேரம் என் உள்ளம் மிகு அந்தரமான நிலையில் தவிக்கத் தொடங்கியது. கடைக்காரரோ ஒருவார்த்தை இல்லை. அங்கு நின்று தப்ப முடியாது. மக்கள் பலர் திரண்டு கொண்டனர். எங்கு நான் ஓடித்தப்பலாம் அத்துடன் பகல் முழுவதும் உணவு இல்லை. உடல் களைப்பு ஒரு புறம் இப்படியாக நான் கவலை மிகுதியால் இறைவா நான் என் செய்ய என்று என்னையே மறந்து நின்ற அந்த கணத்தில் அயலில் நின்ற ஒருவர் திருப்பணிச் சபை காரியதரிசியைப் பார்த்து அந்தாள் பயப்பிடுகிறது. ஏன் அவரை வருத்துகிறீர் என்னுர். என்றதும் காரிய தரிசி இவர் எங்கள் கோவிலைப்பற்றிக்கூடாமல் தன்பேப்பரில் எழுதிவிட்டார். அதற்கு இன்றைக்கு இவரை விடுகிறதில்லை. கோவிலடியில் கொண்டு போய் பதில் கேட்டுத்தான் விடுப்போம் என்றனர். இப்படியாகச் சொல்ல அவர் சொன்னுர் சரி எங்கே அப்பேப்பரைப் பார்ப்போம் என்றதும் பேப்பரை நான் அவர் கையில் கொடுத்ததும் வாங்கிக் கொணடு என் கையில் பிடித்து இழுத்த இளைஞரை விடுவித்துக் கொண்டு நீர் ஒன்றுக்கும் பயப்படாதே! இவர்கள் உன்னைத் துன்பம் செய்ய நான் விடமாட்டேன் என்றுர். அவருடைய அந்த வாக்கை இறைவன் கருணையில் கலந்த தொன்றுகக் கருதினேன். என்பயமும் நடுக்கமும் நீங்கின. அவருக்கு உதவியாக வேறு சிலரும் அங்கு நீதியை கதைத்திட வேகமுடன் வந்த துர்க்கை அம்மன் திருப்பணிச் சபைக் காரிய தரிசியும் இளைஞரும் சிறுது தமது வன் செயலில் இருந்தும் நீங்கினர். அப்படியாயினும் இளைஞர் ஒருவர் என் கையை மீண்டும் பிடித்து இழுத்தார். அப்போது அவ்வழியால் வந்த ஒருவர் இழுத்த அவரை நோக்கி அவர் ஒரு பத்திராதிபர் அவரை நீங்கள் உப்படி வன் செயல் செய்ய நாம் இனிப்பார்த்திருக்கோம் என்றதும் என் கைவிடப்பட்டது அதன் பின்னர் அம்மிண்டர் கூட்டத்தால் என்னை மீட்டெடுத்து அந்த அன்பர்கள் வேறு வழியால் போகச் செய்தனர். அன்று தான் என்பத்திரிகை திருவருள் காப்புடன் நிகழ்கின்றது. கடவுள் தன் அடியார்க்கு தோன்றுத்துணையாகி நிற்கின்றுர். என்பது தெளிவாயிற்று.

அடுத்து தெல்லிப்பழை திருப்பணிச் சபையார்க்கு நாம் மிகுதாழ்வுடன் மொழிவது. அன்றைய இச்செயல் ஒரு கோவில் பேரில் நடப்பது அவமானம் இது காடைத்தனம்.

நீங்கள் தேர் இழுத்த முறை மிகவும் வருந்தத் தக்க முறை எவற்றையும் சிந்தியாது நடந்துள்ளீர்கள். அது பெரும் தவறு. எந்த ஒரு சைவ அறிஞனும் வெட்கப்பட்டு நாணித் தலை குனிய வேண்டிய விடயம்.

பெண்கள் ஒருவடமும் ஆண்கள் ஒருவடமுமாக கோவில் தேர் பெண்ணிற்கு ஆண் எதிர் நின்று இழுப்பதென்றுல் அது நம் சைவ மரபில் ஒருக்காலமும் நடவாத செயல். தனித்து பெண்கள் தேரை இருவடமும் பற்றி இழுத்தாலும் பரவாயில்லை, அது தன்னும் சில பேதையரின் கோவிலில் நடந்துள்ளது.

ஒன்றினை நீங்கள் சிந்தியங்கள. பசுவினை எருது மாட்டுடன் ஒரே நுகத்தில் பூட்டலாமா? பசு மாட்டை பாரம் இழுக்கச் செய்யலாமா? அது நீதிஉடையதா? பசு மாட்டால்வயல் உழலாமா? பசு விற்கு ஒரு தனிமதிப்பு கொடுத்து அதை மிதுபக்குவமாக மரியதையுடன் பேனுவார். ஆண்மாட்டிற்கு அது இல்லை. அதே போன்று நமது பெண்களை கோவிலிலும் மிக்க மதிப்புடன் வைத்திருத்தல் தான் கற்றுணர்ந்தாரின் சீரிய செயல். அதை விடுத்து அவர் களைத்தேர் இழுக்க இனி சுவாமிகாவ இப்படி இப்படி பல செயகளிலும் ஈடுபடவைத்தால் அது சைவபெண்குலத்திற்கு ஓர் அவமானம் வருவிப்பதாகும். இதை நீங்கள் உணர்வில் கெண்டால் நாம் எழுதிய விதத்தில் தவறு காணமட்டடிர்கள். இல்லாதிருந்தால் உங்கள் வன் முறைகளைப்பாவித்து என்னவும் செய்யலாம் எனோ இறைவன் அருள் பெருக சைவநிதிவிளங்க நாம் தொண்டு செய்கிறும்

## அன்பர்களுக்கு தயவான ஒருசெய்தி

இதன் கீழே ஒரு அன்பரின் ஆசீர்வாதக் கடிதம் தரப்பட்டுள்ளது. அவரை நான் ஒருபோதும் கண்டறியவில்லை. இக்கடிதமூலம் நம் பணி பற்றிய உண்மை வரலாற்றை எடுத்துக்காட்டி உள்ளார். அவரது கடிதத்தில் சரியான விலாசம் தரப்படவில்லை. என்றுலும் அது ஒருகால் புனை பெயராக இருக்கவும் கூடும். என்னவாக இருந்தாலும் இன்றைய நிலையில் நம் சமய ஊழல்களை மக்கள் உணர்ந்தாலும் அவற்றை வெளிக்காட்டப் பயந்துள்ளனர். இன்று கோவில் நிர்வாகம் பெரிதும் காடைத்தனவழியில் தான் சில இடங்களில் நடைபெறப்பார்க்கிறது' தெய்வம் உண்டு என்ற சித்தம் இல்லாமல் தமது மனப்போக்கின்படி பல இடங்களில் தொழில்ப்படுகின்றனர்,

தெல்லிப்பழை துர்கை அம்மன் கோவில் பேரில் நடந்த சம்பவம்போல் ஆனைக்கோட்டை உயரப்புலம் பிள்ளையார் கோவிலிலும் மிக வருந்தத்தக்க ஒரு செயல் நடைபெற்றது. ஆனுல் அங்கு அச்செயலை உருவாக்கியவர். பூங்குடுதிவில் இருந்து இங்கு வந்து பூசைக்கிருக்கும் ஓர் பிரமணர். அவரும் கடைத்தனமூலம் நம்மை வெருட்டிட பலமுயற்சிகள் எடுத்தவர், அவை பலிதமாகவில்லை. உண்மையில் கோவிலில் நடக்கும் தகாதசெயல்கள் பற்றி மக்கள் உணர்ந்தாலும் சொல்ல அச்சமே கொள்கின்றனர் என்பதற்கு சான்றுக எத்தனை இவைபோன்ற கடிதங்கள் வந்துள்ளன. அக்கடிதங்கள் பலதில் இதுவும் ஒனறு.

## நாயனுர்கூற்றின்வழிநல்லையாதுணிவு

அல்லல் என் செயும் அருவினை என் செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என் செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனுர்க்கு
எல்லை யில்லதோர் அடிமை பூணடேனுக்கே.

என்பது அப்பர் சுவாமிகள் தேவாரம். எல்லாம் வல்ல இறைவன் ஒருவனையே நமபி அவருக்கு மட்டுமே அடிமையென்ற மும்மலங்களாற் பீடிக்கப்பட்டு இவ்வுலகிலே பாசவலைப்பட்டு மயங்கித்திளைக்கும் பக்குவமற்ற ஜென்மங்கட்கு அடிமைகளாக சொல்ல வேண்டிய வற்றைச் சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்லப் பயந்திருப்பது மானிடர் களிம வஞ்ச மனப்பாலதன்றே. எனவே இன்றைய உலகினரின் இத்தகைய மனநிலையை உணர்ந்து அறிந்து எல்லாம் அவன் செயலே எனத்துணிந்து சந்திர தீபம் கண்டனங்கள் செய்து வருவது வரவேற்கக் கூடியதாகும்.

உண்மை சுடும். உண்மை கசக்கும் எனவும் படித்த சிலர் கூறக் கேட்டுள்ளோம். இவ்விதத்தில் சந்திர தீபம் வெளிப்படுத்தும் பல உண்மைகள் பலருக்கு சுடும் தன்மையாகவும், லேறுபலருக்குக் கசக்கும் தன் தன்மைகளாகவும் உள்ளன. கசப்ப்வர்கட்கு கசக்கட்டும் சுடுபவர்கட்கு சுடட்டும். உண்மைகள் என்றுவது வெளியாகத்தானே வேண்டும். உலகம் உண்மைகளை உணரத்தானே வேண்டும். எனவே சந்திர தீபம் பணி தொடர பாரினில் உண்மை நிலைக்கட்டும்.

]கே. எஸ். தியாகமணி, யாழ்ப்பாணம்]

இப் பத்திரிகை கொக்குவில் மேற்கில் இருக்கும் வை. நல்லையா அவர்களால் வெளியிடப்பட்டது. தொடர்பு கொள்வோர் சந்திரதீபம் கொக்குவில் என விலாசமிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org